Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

வெளியீடு-25 05 ஜூன் 2005 விலை:- 07.00

மனித குல மாண்பிற்காக போராடி மறைந்த தோழர்களே போராட்டக்காரர்களே உங்களுக்கு எம் சிரந்தாழ்ந்த அஞ்சலிகள்.

# மானிட மேன்மைக்காக......

இலங்கையில் தமிழ் மக்கள் இரண்டாந்தரப்பிரசைகளாக வாழ்கிறார்கள் இன பாரபட்சம் நீக்கப்படவேண்டும்.

இலங்கையில் சகல இன மக்களும் சமத்துவமாக வாழவேண்டும் என்பதற்காக குரல் எழுப்பியவர்கள், போராடியவர்கள் வடக்கு கிழக்கில் ஜனநாயகம் வேண்டும், நாகரிகமான வாழ்வு வேண்டும், வேறுபட்ட அபிப்பிராயங்கள், தேடல்கள், கருத்து நிலைகளுடன் வாழ்வதற்கான உரிமையை வலியுறுத்தியவர்கள் எல்லோரும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்போதும் ஓய்விலாப் படுகொலை தொடர்கிறது.

இங்கு முரண்நிலை என்னவென்றால் படுகொலை பாதகத்தை புரிபவர்களே மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வது பற்றி பேசும் முரண் நிலை காணப்படுகிறது. புலிகள் கிழக்கிலும் வடக்கிலும் தலைநகரிலும் நாளும் பொழுதும் கொலை புரிகிறார்கள். ஆனால் அவர்களிடம் இந்த கொலை பாதகத்தை நிறுத்துமாறு அழுத்தியுரைக்காமல் அவர்களிடம் மனிதாபிமானப் பணிகள் பற்றி பேசப்படுகிறது.


சுனாமிப் பணிகளில் இணைந்த கட்டமைப்பை வலியுறுத்தும் சர்வதேச சமூகம் அதில் புலிகளின் பங்களிப்பை பெறுமாறு திரும்பத் திரும்ப வலியுறுத்தும் சர்வதேச சமூகம் புலிகளின இரத்தம் தோய்ந்து தற்போதும் திரவப் பிசுபிசுப்பும் சூடாகவும் இருக்கும் புலிகளின் கரங்களைப் பொருட்படுத்தவில்லை.

யப்பான், நோர்வே, நெதர்லாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்கள் இதனை வலியுறுத்துகின்றன. கண்டியில் நடைபெற்ற உதவிவழங்கும் சர்வதேச நாடுகள் ஸ்தாபனங்களின் கூட்டத்தில் ஜனாதிபதியும் சுனாமி இணைந்த கட்டமைப்பு உருவாக்குவதற்கான அவசியம் தவிர்க்கமுடியாத நிலை பற்றி தெரிவித்திருந்தார்.

ஆனால் சுனாமி கட்டமைப்பு உருவாகுவதாக இருந்தால் குறிப்பாக வகை தொகையின்றி கொலைகள் நிகழும் கிழக்கில் இது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படவேண்டும். புலிகள் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கான அடிப்படைத்தகுதியைக் கொண்டிருக்கிறார்கள் என்பது நிருபிக்கப்படவேண்டும்.

கிழக்கின் மக்கள் 1978 ஆம் ஆண்டிலிருந்து சொல்லமுடியாத வேதனைகளையும், துன்பங்களையும் அனுபவித்து வருகிறார்கள். மட்டக்களப்பு-அம்பாறையில் வீசிய தீராத துன்பங்களிலிருந்து யுத்தகாலத்தில் சத்துருக்கொண்டான், கொக்கட்டிச்சோலை, காத்தான்குடி, ஏறாவூர், அம்பாறை, பொலநறுவை, திருமலை எல்லைப் பிரதேசங்களென பாரிய ஈவிரக்கமற்ற அழிவுகளைச் சந்தித்திருகிறார்கள். பெண்களும், குழந்தைகளும் மிகப் பாரிய அளவில் அழிவுகளைச் சந்தித்தார்கள்.

தொடர்ச்சி 02ம் பக்கம்




# தாய் தந்தையர் கொல்லப்படும் போது பிள்ளைகளின் துயரங்கள்

தாய்தந்தையர் கொல்லப்படும் போது அவர்களின் பிள்ளைகளின் துயரம் விபரிக்க முடியாதது. குடும்பம் என்ற அடிப்படையில் அவர்களின் இழப்பு ஈடுசெயயமுடியாதது. தமிழ் நெற் சிவராமின் உறவுகளின் துயரங்களும் இதைப் போன்ற நூற்றுக் கணக்கான தாய்தந்தையரின் இழப்புககளும் பிள்ளைகளின் மனித உணர்வுகளைப் பொறுத்தவரை ஒரே மாதிரியானவை. யாருடைய துயரத்திற்கும் குறைந்ததல்ல. சில துயரங்களை உப்பரிகையாகவும், பல துயரங்களை புழுபூச்சிகளினதாகவும் மாற்றி மனித ஆன்மாவைக் கொன்று விடாதீர்கள்.





பிள்ளை வீதியில் சுடப்பட்ட தந்தைக்கு அருகிலும், சுனாமி அகதிமுகாமில் ஈ.பி.ஆர்.எல்.எப் தோழர் வரதராஜாவின் பிள்ளைகளும், உறவுகளும் இதேபோல்தான். படுகொலைவாதிகளுக்கு இதனைப்பற்றி சொரணை எதுவும் இல்லை.

பிரபாரகரனின் மாமனார் ஏரம்பு அவர்களின் மரணச்சடங்கிற்கு டென்மார்க்கிலிருந்து வந்த உறவினர்கள் பலத்த அரச இராணுவ கொமாண்டோ பாதுகாப்புடன் மரணச்சடங்கிற்கு வந்து துக்கத்தைப்பகிர்ந்து கொண்டு சௌகரியமாகத் திரும்பிச்சென்றார்கள்.

ஆனால் பலருக்கு உறவுகளின் இறுதி அஞ்சலி இல்லாமலே மண்ணோடு மண் ஆயினர் துயரங்கள், இழப்புகள், ஏழை மீனவன், சுனாமி அகதி, எங்கள் தோழன் வரதராஜாவின் துயரங்களை உப்பரிகையாகவும், பல துயரங்களை புழுபூச்சிகளினதாகவும் மாற்றி மனித ஆன்மாவைக் கொன்று விடாதீர்கள்.

எமது ஊடகங்களும் பிரபலமான துயரத்தையே பதிவுசெய்கின்றன. ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் மதுபோதையில் கிறங்கும் மேல்தட்டு வர்க்கத்தினரை வாராந்திரம் பிற்பக்கங்களில வண்ணங்களில் பிரசுரிப்பதுபோல் தான துரதிஷ்டவசமாக பல விடயங்களில் ஊடகவியலாளர்களின் மனநிலை இருக்கிறது.

## சிவராம் படுகொலையின் பின்னணி

தமிழ் நெற் இணையத்தளத்தின் ஆசிரியர் குழுவில் பிரதான பங்கு வகித்த சிவராம் அவர்களின் படுகொலையின் பின்னணி ஆராயப்படவேண்டும்.

சிவராம் புலிகளின் ஆதரவாளர் என்பதிலோ அவரது தமிழ் நெற் இணையத்தளம் புலிகளிற்கு மற்றெல்லா ஊடகங்களையும் விட மிகப்பெரிய சேவையைச் செய்திருக்கிறது என்றால அது மிகையல்ல. கோட்பாடளவில் அது பாசிச ஆதரவு ஊடகமே.

சிவராம் தனது ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட கால எழுத்துக்கள் எல்லாவற்றிலும் புலிகளை ஒரு பாசிச இயக்கத்தை இலட்சிய உண்மை அல்லது சரி என வைத்துக் கொண்டே எழுதுவார்.

புளொட் இயக்கத்திலிருந்து ஊடகத்துறைக்கு வந்த காலத்தில் அவர்கள் புலிகளின் ஏகபிரதிநிதித்துவ பாசிச கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவராக இருக்கவில்லை. அதனை எதிர்த்தும் எழுதினார்.

பின்னர் முழுதாகவே அவர் பாசிசத்துடன சங்கமமாகியதை அவரது எழுத்துக்கள் [illegible]

தொடர்ச்சி [illegible] பக்கம்

# மறைந்த முன்னாள் திருமலை நகர பிதா சூரியமூர்த்தி அவர்களுக்கு எம் கண்ணீர் அஞ்சலி.



வடக்கு கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும், திருமலை நகர பிதாவாக பதவி வகித்தவரும் கடந்த மூன்று தசாப்தங்களாக சமூக அரசியல் பணிகளில் தன்னை அர்ப்பணித்திருந்தவரும், ஜனநாயக அரசியல்வாதியுமான சூரியமூர்த்தி அவர்களின் மறைவு ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் நேசிக்கும் எமது மக்களுக்கு பேரிழப்பாகும். இவர் ஆரம்பத்தில் தமிழர் விடுதலை கூட்டணியிலும், பின்னர் புளொட், ஈ.என்.டி.எல்.எப், திரு.வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான த.வி.கூ விலும் பங்களித்துள்ளார். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் த.வி.கூ சுயேட்சைக்குழுவில் யாழ் குடாநாட்டில் போட்டியிட்டார்.

தனது சமூக அரசியல் வாழ்வில் சூரியமூர்த்தி சொல்லொணா துன்பங்களை அனுபவித்தவர். ஒரிசா, தமிழகத்திலும் ஒரு கட்டத்தில் புலம் பெயர்ந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

மாகாணசபை உறுப்பினராக பதவி வகித்தபோதும், திருமலை நகரபிதாவாக பதவிவகித்த காலத்திலும் தமிழ் மக்களின் தேசிய இன உரிமைகள் தொடர்பாக ஆக்கபூர்வமாக குரலெழுப்பியவர், பங்களித்தவர். திருமலை கோயிலில் வழிபடுவதற்கான உரிமை, திருமலையில் புதிய சந்தை பொதுவான இடத்தில் அமைய வேண்டும் என போராடியவர். யாழ்ப்பாணத்திற்கும் திருமலைக்கு மிடையே கப்பல் மூலம் பயணம் செய்பவர்களுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தவர்.

1980களின் இறுதிப்பகுதியில் அமைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையில் அதன் உறுப்பினராக-பிரதிச் சபாநாயகராகவும் பணியாற்றியவர். சூரியமூர்த்தி அவர்கள் நகரபிதாவாக கடமையாற்றிய காலத்தில் திருமலை நகரசபையின் பங்களிப்பு முக்கியமானது. பல அபிவிருத்திப் பணிகளையும் அவர் மேற்கொண்டிருக்கிறார்.

எளிமையும், நற்பண்புகளும் நிறைந்த சூரியமூர்த்தி அவர்கள் சமகாலத்தில் அரிதாகிவிட்ட ஜனநாயக அரசியல் அபிலாஷைகள் கொண்ட ஒருவர்.

"அன்பையும் மனிதாபிமானத்தையும் அழித்துவிட்டு எம் சமூகத்தில் அதிகாரம் மட்டும் வாழ முனைகிறது"

அன்னாரது இழப்பு தற்போதைய இக்கட்டான நிலையில் மிகப் பாரியதாகும். அன்னாரின் மறைவிற்கு ஈ.பி.ஆர்.எல்.எப் தனது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் அரசியல் நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா EPRLF-P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## இனமோதல்கள் எம்மை மீட்சியில்லா இடத்தில் வீழ்த்திவிடும்

திருமலையில் தொடர்ந்து மாறி மாறி வன்முறைகள் இடம்பெறுகின்றன. திருமலை நகரில் திடீரென எழுந்த புத்தர் சிலை இதற்குக் காரணமாய் அமைந்தது. இதன் பின்னர் சிங்களவர்கள், முஸ்லீம்கள், தமிழர்கள் வாழும் பகுதிகளில் 20 கைக்குண்டுகள் வீசப்பட்டன. இதில் உயிர்ப்பலிகளும் நிகழ்ந்தன. இந்த வகையான தாக்குதல்கள் அதுவும் திருகோணமலை போன்ற பிரதேசங்களில் நிகழ்வது ஒன்றும் தற்செயலான நிகழ்ச்சிகள் அல்ல. மக்களிடையே மோதலை உருவாக்கி பாரிய இனக்கலவரங்களை தூண்டுவதற்கான உந்துதல்கள் இத்தாக்குதல்களில் இருக்கின்றன. பல இன மக்கள் வாழும் திருமலை, அம்பாறை போன்ற பிரதேசங்களில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியிருக்கிறது. இங்கு உருவாகும் எந்தவொரு சிறு பொறியும் பெரும் காட்டுத் தீயை உருவாக்கி விடலாம்.

திருமலையில் வாழும் சகல இன மக்களினதும் பாதுகாப்பும், இருப்பும் இன உறவுகளும் உறுதிப்படுத்தப்படுவதும் மேம்படுத்தப்படுவதும் முக்கியமானது. திருமலையில் மூவின மக்களும் சமதொகையினராக வாழ்கின்றனர். அங்கு எந்த சமூகத்தினரும் பெரும்பான்மையினர் அல்ல என்ற கருத்து சில கல்விமான்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்களால் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் எழுதப்படுகின்றன. உண்மையில் திட்மிட்ட சிங்கள குடியேற்றத்தினூடாகவும், இனவன்முறைகளினூடாகவும் தமிழ் மக்கள் அங்கு வருடக்கணக்கில் ஒரு நிகழ்வுப் போக்காக தமிழர்கள் திருமலையில் சிறுபான்மையினராக்கப்பட்டார்கள். புலம் பெயர்ந்து இந்தியாவுக்கு அகதிகளாக சென்ற மக்களில் கணிசமானோர் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பவில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிழக்கில் குறைந்தபட்சம் நியாயமான நிலையொன்று தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் பிரேமதாசா அரசும் புலிகளும் அனைத்தையும் சீர்குலைத்தார்கள். 1980களுக்கு பிந்திய திட்டமிட்ட குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும் புதிய திட்டமிட்ட குடியேற்றங்கள் எதுவும் மேற்கொள்ள முடியாது என்றே தெரிவிக்கப்பட்டது.

மிகவும் உணர்திறன்மிக்க இந்தப் பிரச்சினை மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லீம்களின் சமூக, பொருளாதார வாழ்வு இருப்பிற்கு எதிராக புலிகள் சிங்கள பேரினவாதத்துக்கு சற்றும் குறையாத வன்முறைகளை மேற்கொண்டதனால் தமிழ் பேசும் சமூகத்தினரிடையே பாரிய இடைவெளி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரச பயங்கரவாதமும், சிங்கள இனவாதிகளும் தமிழர்கள் மீது மேற்கொண்ட வன்முறைகள், அவர்களின் இருப்புக்கு எதிராக மேற்கொண்ட அச்சுறுத்தல்கள், எல்லைக் கிராமங்களில் புலிகள் சிங்கள மக்களுக்கு எதிராக மேற்கொண்டுவந்த ஈவிரக்கமற்ற படுகொலைகள் என்பன தவிர சமாதான காலமென்று சொல்லப்படும் இக்காலப் பகுதியில் முஸ்லீம்- தமிழ் முரண்பாடுகள். சிங்கள-தமிழ் முரண்பாடுகள் ஆத்திர மூட்டல்கள் மூலம் தோற்றுவிக்கப்பட்டன. திருமலை நகரில் வைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரமும் இதில் அடங்குகிறது.

சுனாமி பேரலைகள் கிழக்கை, தெற்கு, வடக்கு கரையோரங்களை தாக்கியபோது இயற்கையின் கோரத்தாண்டவத்துக்கு முன்னால் மனிதர்களிடையேயான வேறுபாடுகள் கடற்கரையில் சிறுநண்டு கீறிய படமாக கரைந்தோடின. அந்தக் கணங்கள் அப்படியிருந்தன. நாம் மனிதர்கள் என்பது மாத்திரமே உண்மை என்பது உறைத்தது. பேதங்கள் கரைந்து மனிதர்கள் ஒருவருடைய துன்பத்தை மற்றவர் கண்டு துடித்துப் போனார்கள். சுனாமி அலை தாக்கிய மறுகணங்களில் மற்றைய பிரச்சினைகள் எல்லாம் பூச்சியம் என்ற நிலைக்கு சென்றிருந்தது.

விசேட அதிரடிப்படையும். இராணுவமும் உள்ளூர் தமிழ், முஸ்லீம் இளைஞர்களும் ஆட்களை மீட்கும் பணிகளில் இணைந்து ஈடுபட்டார்கள். கங்கொடவில சோமதேரர் அவர்கள் மறைந்தபோது தென்பகுதியில் பரவலாக காவிக்கொடிகள் பறந்தன. ஆனால் சுனாமியின் பின்னர் முழு நாட்டிலும் மூலை முடுக்குகள் எங்கும் வெள்ளைக் கொடிகள் பறந்தன. நாடு துயரத்தில் மூழ்கி இருந்தது.

இப்போது சுதாகரித்து விட்டார்கள். பழையபடி கத்திகளை தீட்டுகிறார்கள். ஒருவரையொரு நெருப்பு விழும் கண்களால் பார்க்கிறார்கள். இதுவொன்றும் எதேச்சையாக நடக்கவில்லை. இந்த நாட்டில் சகல இன மக்களும் நல்லுறவுடன் தமது தனித்துவங்களுடன் வாழ்வதை விரும்பாத இனவாத நெகிடி நெருப்பில் குளிர்காய விளையும் சக்திகளே இதனை மேற்கொள்கின்றன.

திருமலை நகரில் முளைத்துள்ள சட்டவிரோத கட்டிடங்கள், சமய சின்னங்கள் ஆகியவற்றை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் அதிகார பகிர்விற்கான நிகழ்வுப் போக்கின் ஒரு கட்டமாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாகிய மாகாண அரசின் தலைநகரமாக திருமலை உருவாகியது. தற்போதும் வடக்கு கிழக்கின் நிர்வாகத் தலைநகர் திருமலையே. திருமலையில் நல்லுறவு பேணப்பட வேண்டும். அங்கு எற்படக்கூடிய பிரச்சினைகள் நாடுமுழுவதும் காட்டுத்தீயை மூட்டிவிடலாம். அந்த கசப்பான காட்டுமிராண்டி நிகழ்வுகளை இனிமேலும் அனுமதிக்க முடியாது.

## மானிட மேன்மை....................

01ம் பக்கத் தொடர்ச்சி

சுனாமி அனர்த்தம் இலங்கையின் கரையோர சமூகவாழ்வு நாகரிகத்தையே அழித்து விட்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சுனாமியால் அழிவைச் சந்தித்த மக்கள் எல்லோருமே தமக்கு நீதி, நியாயத்தை கோரி நிற்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் தொடரும் இடையறாக் கொலைகள் யுத்த நோக்கங்களுக்காக சிறுவர் சிறுமியரைப் பிடித்துச் செல்வது அதுவும் சுனாமி அகதி முகாமில் பிடித்துச் செல்வது என்பனவெல்லாம் பெரும் மனவிகாரத்தை ஏற்படுத்தியுள்ளது. விரக்தியின் விளிம்பிற்கு இம்மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் மனிதாபிமானப்பணி என்பது சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடிமனைகள் நிர்மாணிப்பது, குடிநீர், மின்சாரம் கல்வி, சுகாதாரம் போன்ற உள்ளக கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதும் அவர்களிற்கான தொழில் உத்தரவாதத்தை ஏற்படுத்துவதும் அவர்களின் மனநிலையில் சாந்தியும், சமாதானமும் நிலவும் சூழ்நிலையை ஏற்படுத்துவதாகும்.

ஆனால் இந்த மக்கள் வாழும் சுற்றாடலிலும், அவர்கள் வாழும் முகாம்களிலுமே பிஸ்டல் வெடிகளும், கிரனைட் வெடிகளும், உயிர்ப்பலிகளும் நிகழ்கின்றன. எனவே தமிழர் வாழ்வில் மனிதப்பணபுடைய முகங்கள பற்றாக்குறையாக இருக்கின்றன. நாகரிகம் உயர்விழுமியங்கள் சிதைவடைந்துள்ளன. உயிரின் மதான அச்சம உயிர்க்கொடியை யாருடனும் பறிகொடுத்துவிடாமல் கொண்டோடித்திரியும் இந்த அச்சம் நீக்கப்பட வேண்டும். சுனாமி நிவாரணப்பணிகளுக்கு இது அத்தியாவசியமான நிபந்தனையாகும்.

அரிது அரிது மானிடராதல் அரிது. ஆனால் இங்கு 'மானிடம் அரிதாகிக் கொண்டிருகிறது. மிருக உணர்ச்சிகள் ஆதிக்கம் பெற்றிருக்கின்றன. சமூகத்தின் அதிகாரம் என்பதை விட சமூகத்தின் மேல் அதிகாரம் என்பதே வலியுறுத்தப்படுகிறது.

தமிழ் சமூகத்தில் பின்னமைப்பியல்வாதம் பற்றி பேசுபவர்களும் அதிகாரத்திற்கு அடிபணியும் போக்கைக் காட்டுவது, அந்த விடயத்தை பற்றி புரிதல் இன்மையையே புலப்படுத்துகிறது. துரதிஷ்டவசமாக தமிழ் சமூகத்தில் மார்க்சியமும் அரைகுறையாகத்தான் புரிந்துகொள்ளப்பட்டது. முழுதாகப் புரிந்துக் கொள்வது என்றொரு விடயம் இல்லைத்தான் ஆனால் அதிகாரத்தின் பல்வேறு பரிமாணங்கள் இலங்கை சமூகத்தில் இருக்கின்றன. அவை மனித குலத்திற்கு விரோதமானவை என்ற எளிமையான உண்மை புரிந்து கொள்ளப்படவில்லை. பின் அமைப்பியலின் வரைவிலக்கணங்களை இலங்கையின தமிழ் ஊடகங்கள் வெளியிடுகின்றன.

ஆனால் தமிழ் ஊடகங்கள் தமிழ் சமூகத்தினுள் நிலவும் அதிகாரங்கள் பற்றி கேள்வி எழுப்புவதில்லை. இல்லையேல் அச்சத்தின் காரணமாகவோ அல்லது நேர்மையீனம் காரணமாகவோ கண்டும் காணாமல் விடப்படுகின்றன.

இலங்கையின் ஒட்டுமொத்த வாழ்வும் வெவ்வேறு தளங்களில் ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும் தெற்கின் ஏழை விவசாயிகளின் ஜனநாயகக் குரல், கிழக்கு வடக்கில் தேசிய ஒடுக்குமுறைக்குள்ளான மக்களின் குரல், பிராந்திய ரீதியான ஒடுக்குமுறை, முஸ்லீம் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறை, வடக்கின் சாதி ரீதியான ஒடுக்குமுறை, ஒட்டுமொத்த நாட்டிலும பொருளாதார ரீதியான ஒடுக்குமுறை, கிராமம் நகரத்திற்கிடையேயான மிகப்பெரிய இடைவெளி என்பன சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை.

மிகப்பாரிய ஜனநாயக மறுமலர்ச்சி இந்த நாட்டில் தேவைப்படுகிறது முதலில் படுகொலைகள். யுத்தத்திற்கு சிறுவர் சிறுமியரை அணிதிரட்டுவது முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும். இவற்றைச் செய்யாமல் சுனாமி நிவாரணப்பணிகளில் இணைந்த செயற்பாடு எத்தகைய பலாபலனைத் தரும் என்பது கேள்விக்குரியதே.

தவிர சுனாமிக்கு ஒதுக்கப்படும் பணம் விரயம் செய்யப்படாமல், துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருக்கும் என்பதும் முக்கியமான கேள்வியாகும். ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்திலும் சுனாமியால் பாதிக்கபட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்திலும் புலிகள் தமக்கொரு பங்கை எடுத்துக் கொள்கிறார்கள். தவிர புலிகளால் வடக்கில் கட்டியமைக்கப்பட்ட தற்காலிக வீடுகள் மிகத்தரம் குறைந்தவை அதற்கு செலவழிக்கப்பட்ட பணத்திற்கும் அவற்றின் தரத்திற்கும் இடையே பாரிய இடைவெளி இருப்பதாக சர்வதேச உள்ளூர் மனிதாபிமானப் பணியாளர்களின் ஆய்வறிக்கைள் தெரிவிக்கின்றன. இந்தியாவிலிருந்து வெளிவரும் அரசியல் பொருளாதார ஆங்கிலவார சஞ்சிகை ஒன்றில் இந்த விடயங்களைப்பற்றி விலாவாரியாக எழுதப்பட்டுள்ளது.

ஏற்கனவே புலம்பெயர்ந்த தமிழர்களிடம் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக சேர்த்துக் கொண்ட பல நூற்றுக்கணக்கான டொலர்கள் எங்கு சென்றன? அந்த பணத்திற்கு என்ன நடந்தது? என்பது இன்றும் பதில் இல்லாத கேள்வியாகத்தான் இருக்கிறது.

தற்போது வெளிநாடுகளில் வசிப்பவர்கள் பலர் மக்களுக்கு ஏதும் செய்யலாமா என்று சிந்திக்கிறார்கள். அவர்கள் வாரியிறைத்த பணம் உரியவர்களைச் சென்றடையவில்லை என்பதால் அவர்கள் மனம் கசந்து போயுள்ளனர்.

இதற்கப்பால் புகலிடத்தில் வாழ்பவர்களும் வன்னிக்கு அழைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள் என்ற அதிர்ச்சித்தகவல் சர்வதேச அளவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் ஒரு அதிர்ச்சி சலனத்தை தோற்றுவித்துள்ளது. தமிழர்கள் மத்தியில் புதிய இராணுவ கட்டமைப்பு தன்னை கோரமாகவும் ஈவிரக்கமின்றியும், சுயநலத்துடனும் தன்னை ஸ்தாபித்துள்ளது. அது கவிஞனையும், விஞ்ஞானியையும், எழுத்தாளனையும் ஏன் முழுச்சமூகத்தையுமே தனது கைதியாக வைத்திருக்க முயல்கிறது கீழ்ப்படிய மறுப்பவர்களை எல்லாம் கொன்று தள்ளுகிறது.

தமிழர்கள் அதிகாரப்பகிர்வை மாத்திரமல்ல புதிய இராணுவ கட்டமைப்பிடமிருந்து தமது சுயநிர்ணய உரிமையையும் வென்று கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது. இந்த இராணுவ கட்டமைப்பாக இருக்கும் புலிகள் மக்களின் எத்தகைய கருத்துக்களும் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கும் இடமளிப்பதில்லை. தொடர்ச்சியாக ஏற்படுத்தி வந்த கொலை நிட்டுரங்களால் புலிகளுக்கு பணிந்து போவது என்ற நிலையும் காணப்படுகிறது.

புத்தியுள்ள சுதந்திரத்தை விரும்புபவர்கள் புலிகளின் நிழலில் அந்த இராணுவக் கட்டமைப்பின் கீழ் வாழ விரும்பவில்லை. தட்டிக்கேட்க நினைப்பவர்களும் நினைப்பவர்கள் தங்கள் நடத்தைகளினூடாகவே புலி இராணுவ கட்டமைப்பால் கண்டுபிடிக்கப்பட்டு கொல்லப்படுகிறார்கள். அல்லது புலிகளின் சித்திரவதை முகாம்களுக்கு கொண்டுச் செல்லப்படுகிறார்கள்.

அடங்கி ஒடுங்கிப்போன மக்கள் பொதுத்தேர்தலில் கூட புலிகளின் இராணுவ கட்டமைப்பின் அதிகாரத்தை நிராகரிக்கப் பயப்படுகிறார்கள் ஏதோவொரு தளத்தில் மாற்று அரசியல் கட்சிகள்,இந்தியா, ஐநா நிறுவனமான யுனிசெப், சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு, மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைகழக ஆசிரியர் சங்கம் என்பன தொடர்ந்து சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திவருகின்றன.

### ஆனாலும் கொலைகள் வரம்பற்று தொடர்கின்றன.

கொலைஞர்களின் தேசம் நாம் ருவண்டாவின் டுட் சி !டு கொலைஞர்களுக்கு சளைத்தவர்கள் என்பது போல் நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. நாகரிக உலகத்துடன் எம்மை அடையாளம் காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

படுகொலைச் சித்தாந்தத்திற்கெதிராக உள்ளூரிலும் சர்வதேச அளவிலும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பப்பட வேண்டும். அது நாகரிகமான மனிதர்களின் கடமை. உலகில் வாழும் நாகரிகமான இலங்கையர்கள் யாவரும் இக் கடமையை முன்நிறுத்த வேண்டும். கொலைகாரர்களுக்கு உலகில் எங்கும் அரவணைப்பில்லை என்ற நிலை தோற்றுவிக்கப்பட வேணடும்.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**
**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 25179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

141A, மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 22 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியின் பெயரால் புலிகள் மற்றும் ரி.ஆர்.ஓ நடாத்திய கொள்ளைகளும் ஊழல்களும்

## புள்ளிவிபரங்களுடன் ஒரு அறிக்கை

ஆசியாவில் டிசெம்பர் 26, 2004 இல் தாக்கிய சுனாமி சிறிலங்காவில் 30,000 இலிருந்து 40,000 வரையான மக்களைக் கொன்றுள்ளது. அரை மில்லியன் மக்களை இடம்பெயர வைத்துள்ளது.

பல்லாயிரம் வீடுகளை, பாடசாலைகளை, வைத்தியசாலைகளை, ஹோட்டல்களை, பொதுக் கட்டிடங்களை, வீதிகளை, புகையிரதப் பாதைகளை, மின் இணைப்புகளை அழித்துள்ளது. புவியியல் ரீதியாக வட-கீழ் மாகாணங்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டவை. அதற்கு அடுத்ததாக தென், மேல் மாகாணங்கள் பாதிக்கப்பட்டன. மரணங்களையும் இடப் பெயர்வுகளையும் பொறுத்தமட்டில் கிழக்கு மாகாணமே ஆகக் கூடப் பாதிக்கப்பட்டது. அதற்கு அடுத்ததாக தென்மாகாணமும் வடமாகாணமும் பாதிக்கப்பட்டன. இவற்றுள் 30 வீதமான இறப்பு அம்பாறையில் நடந்துள்ளது.

சிறீலங்காவில் வட-கீழ் மாகாணங்கள் எட்டுப் பிராந்தியங்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் மூன்று கிழக்கிலுள்ளது (அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை) 5 வடக்கிலுள்ளது. (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு வவுனியா). கிழக்கிலுள்ள மூன்று பிரதேசங்களும் வடக்கிலுள்ள மூன்று பிரதேசங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவும் சுனாமியாற் தாக்கப்பட்டன. இருந்தபோதும் கிளிநொச்சிப் பிரதேசம் சொற்பமாகவே தாக்கப்பட்டது.

ஆகத் தாக்கப்பட்ட தொழிற்துறைகளான மீன்பிடி, உல்லாசப் பிரயாணம், மற்றும் தெற்கிலுள்ள சிறு தனியார் நிறுவனங்களாகும் கிழக்கிலே மீன் பிடியும் உல்லாசத் துறையும், வடக்கிலே மீன்பிடி, சிறீலங்காவில் சுனாமியால் ஏற்பட்ட அழிவின் மொத்தப் பெறுமதி 1 மில்லியன் அமெரிக்க டொலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அழிவுகளை மீண்டும் ஈடு செய்வதற்கு 1.5 பில்லியன்கள் அமெரிக்க டொலர்கள் வேண்டுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது.


மொத்தப் புனருத்தாரண மீள்கட்டமைப்புக்கான செலவுகளில் 41 வீதம் கீழ் மாகாணத்திற்கும் 29 வீதம் தென் மாகாணத்திற்கும் 17வீதம் வடமாகாணத்திற்கும் 13வீதம் மேல்மாகாணத்திற்கும் தேவையாக இருக்கிறது. (ஆதாரம் **ADB/JbIC/JICA/WB**) வீடுகளைக் கட்டுவதற்கு 38 வீதமும் வீதிகளைப் போடப் 15 வீதமும் உல்லாசப் பயணத்துறைக்கு 10 வீதமும் புகையிரத வீதிகளைப் திருத்துவதற்கு 10 வீதமும் மீன்பிடிக்கு 9வீதம், நீர்ப்பாசன வடிகால்களுக்கு 9வீதம், சுகாதாரத் துறைக்கு 7வீதம், மின்சக்திக்கு 5வீதம், கல்விக்கு 3வீதம் தேவையாக இருக்கிறது.

அனர்த்தம் நடந்தவுடன் உடனடி நிவாரணங்களை தெற்கில் ஜே.வி.பியும் வடக்குக் கிழக்கில் புலிகளும் செய்தன. ஜே.வி.பி தனது சிரமதானப் பணிகளுக்கான ஆள் அணி சேனைகளை சர்வகலாசாலைகளிடமிருந்து பெற்றது. புலி தனது கடற்புலிகளிடமிருந்தும் **N.G.O** வான **T.R.O** விடமிருந்தும் பெற்று செயற்பட்டன. இந்த ஆய்வின் நோக்கம் என்னவெனில் சுனாமிக்குப் பின் உதவி, புனருத்தாரணம், மீள்கட்டுமானப் பணிகளுக்கென வட-கீழ் மாகாணங்களுக்கு வரும் வளங்களை ஆவணப்படுத்தி அதிலே ஏற்படும் ஊழல்களைப் பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து ஊழல்களை முழுமையாகவோ, பகுதியாகவோ குறைப்பதற்கு உதவி செய்வதாகும். இந்த ஊழல் போட்டியில் அரசாங்கம், புலிகள் **N.G.O** கள் பந்தயம் பிடித்து நெருக்கடிகளைக் கொடுகிறார்கள்.

இந்த ஆய்வானது உண்மையில் நிலவும் செய்திகளிலிருந்தும், இரண்டாம் தரப்பிலிருந்தும் கிடைக்கும் செய்திகளிலிருந்தும், வடகீழ் மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில், முல்லைத்தீவில், கிளிநொச்சியில் செய்த களநிலவரக் கணக்கெடுப்புகளிலிருந்தும் எடுத்தாளப் படுகின்றன. புலிக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கிளிநொச்சிப் பிரதேசத்தில் கள ஆய்வுகள் மார்ச் 10-14 தேதிகளிலும் அரசு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஜனவரி தொடக்கம் மார்ச் வரையும் செய்யப்பட்டது. அண்ணளவாக 60 குடும்பங்களை வடமாகாணத்தில் தேர்வில் கட்டைக்காடு, மருதங்கேணி அகதிகள் முகாம்களிலும் கிளிநொச்சியிலுள்ள கல்லாறு அகதி முகாமிலும் இருந்து ஆய்வுக்காகத் தரவுகள் நேர்காணல்களினூடாக சேகரிக்கப் பட்டன.

### புள்ளிவிபரத் தவறுகள்

சுனாமி அழிவுகள் எவையென்றும் அவைக்கான தேவைகள் எவையென்றும் மூன்று ஆய்வு நிறுவனங்கள் கடந்த மாதங்களில் ஆய்வு செய்தன. **TAFREN (Task Force for Rebuilding the Nation)** என்று சொல்லப் படும் சிறிலங்கா அரசாங்கத்தின் புனருத்தாரணத்திற்கான தேவைச் சக்திகள நிறுவனம், புலிகளின் வட-கீழ் மாகாணத்திற்கான தேவைகள் மதிப்பீட்டு நிறுவனமான **NENA (North-East Needs Assessment).**



ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான், சர்வதேச வங்கிகள், உலகவங்கிகளுக்கான இணைந்த தேவை மதிபபீட்டு நிறுவனமான **JNA(Join needs Assessment)** என்பனவே இந்த ஆய்வுகளையும் மதிப்பீடுகளையும் செய்தன.

தொடக்கத்திலிருந்தே எவ்வளவு பேர் இறந்தார்கள் எவ்வளவு சொத்துக்கள். பெறுமதிகள் நாசமாகின என்பவற்றில் நேரத்திற்கு நேரம், நிறுவனங்களுக்கு நிறுவனம், ஆட்களுக்கு ஆட்கள் வித்தியாசமான எண்ணிக்கைகளையும் பெறுமதிகளையும் சொல்லி வந்தன.

உதாரணத்திற்கு பிரதேச செயலர்களின் மதிப்பீட்டின்படி மட்டக்களப்புப் பிரதேசத்தில் 1,75,000 பேர் பாதிக்கப்பட்டவர்கள் என்று பூர்வாங்கச செய்தி கிடைத்தது. இது பின்பு 2,54,000 என்று மேல்நோக்கித் திருத்தப்பட்ட செய்தி கிடைத்தது. காலிச் செயலர் பிரதேசத்தில் 94,000 பேர் பாதிக்கப் பட்டவர்கள் என்று செய்தி வந்தது. பின்பு அது 1,23,000 என்று மேல் நோக்கித் திருத்தப்பட்டது.

திருகோணமலையில் பூர்வாங்கச் செய்தியானது, பின் 10,000 குடும்பங்களாக அதிகரிக்கப்பட்டது **(6.2.2005 Sunday Observer).** இங்கே முக்கியமான ஒன்றைக் கவனிக்க வேண்டும். அது என்னவெனில் இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூபா 5000 தருவதாக குறைந்தது மூன்று மாதங்களுக்குத் தருவதாகக் கூறிய பின்னரே திருத்தப் பட்டது. அடுத்து புள்ளிவிபரப் பிசகு என்னவெனில் அழிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையாகும்.

**JNA** செய்திப்படி அம்பாறையில் 29,000 வீடுகள் முற்றாக அழிந்தன. ஆனால் **NENA** தரவின்படி 19,000 வீடுகளே அழிந்தன. இதே மாதிரியே யாழ்ப்பாணப் பிரதேசத்தில் **JNA** [illegible] வற்படி 12,000 வீடுகளும் **NENA** கூற்றுப்படி 6,700 வீடுகளே அழிந்தன. கிளிநொச்சியில் **JNA** இன்படி 3,400 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் 4,250 வீடுகள் பகுதி அழிந்ததாகவும் கூறியது. ஆனால **NENA** வின் கணக்குப்படி 246 வீடுகள் முற்றாக அழிந்ததாகவும் சேதமடைந்த வீடுகள் ஒன்றுமே இல்லையென்றும் கூறுகின்றது.

முல்லைத்தீவில் **JNA** வின் கணக்குப்படி 10,600 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் 5,300 வீடுகள் சேதப்படுத்தப் பட்டதாகவும் கூறுகின்றது. ஆனால் **NENA** வின் கணக்குப்படி 5,000 வீடுகள் முற்றாக அழிக்கப் பட்டதாகவும் 400 வீடுகள் சேதப்படுத்தப் பட்டதாகவும் கூறுகிறது. **JNA** வுக்கும் **NENA** வுக்குமிடையிலுள்ள புள்ளிவிபரப் பிசகானது **TAFREN** க்கும் **NENA** வுக்கு உள்ளதிலும் பார்க்கப் பெரிதானது.

**JNA** வுக்கும் **NENA** வுக்குமான பெரிய வித்தியாசம் இருப்பதற்கு நம்பக்கூடிய விளக்கம் இதுதான். ஒன்று புள்ளி விபரம் சேர்த்தவர்கள் பிழையான தகவல்களைத் தந்திருக்கலாம். இல்லையேல் வேண்டுமென்றே உணர்வு பூர்வமாக கூடுதலான வீடுகள் அழிக்கப் பட்டதாக உதவி வழங்கும் நாடுகளிலிருந்து கூடுதலான நிதியைப் பெறுவதற்கு ஊதிப் பெருக்கப்பட்டதாக இருக்கலாம். ஏனெனில் அழிந்த வீடுகளை மீளக் கட்டுவதற்குக் கொடுக்கப்படும் நிதிகளில் மூன்றில் ஒன்று பயன்படுத்தப்படப் போகிறது.

இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட மற்றைய நாடுகளின் அனுபவங்களிலிருந்து உதவி பெறுவதறகு உரிமை இல்லாதவர்கள் நிவாரணப் பொருட்களும் காசும் வீடுகளையும் நாடுமுழுவதும் பெற்ற சம்பவங்கள் உண்டு. எண்ணற்ற பாதிக்கப்படாத குடும்பங்கள் உதவி பெற்றிருக்கிறார்கள். பண மானியத்தைப் பெற்றிருக்கிறார்கள். அரசியல் செல்வாக்கினால் வீடுகளைப் பெற்றிருக்கிறார்கள். இநத மாதிரியான ஊழல்களை வட-கீழ் மாகாணத்தில் புலி சுனாமியைக் காட்டி அரசாங்கத்திடமிருந்தும் உதவி வழங்குவோரிடமிருந்தும் மண்கொள்ளை அடிக்கிறது.

வடக்குக் கிழக்கில் ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்தோ உதவி செய்வோரிடமிருந்தோ எந்தவித இழப்புக்கான பிராயச்சித்தமும் அளிக்கப்படவில்லை. அவர்களைப் பற்றிக் கணக்கும் போடாமல் சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதையெண்ணி அவர்கள் பொறாமைப்படுவது இயற்கையே.

ஆகவே சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்வதைப் போல யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பது தவறான விடயமாகாது. வட-கீழ் மாகாணத்தில் அதிகமாக என்ன நடக்கிறதென்றால் புலிக்கு விசுவாசமாக இருப்பவர்களுக்கும் புலிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குமே சுனாமி நிவாரணத்திலும் புனருத்தாரணத்திலும் முன்னுரிமையும் விசேட சலுகையும் வழங்கப்படுகின்றன. [illegible]

கடற்புலிகளுக்குக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிலைக் கேணி மக்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா கொடுக்கப்பட்டதென்றும் தங்களுக்குக் கொடுக்கப்படவில்லையென்றும் கட்டைக்காடு அகதிகள் முகாமிலுள்ளவர்கள் கூறினார்கள். சுனாமியாற் பாதிக்கப்படாத முழு நித்தியா வெட்டைக் கிராமவாசிகளை தங்களது முகாமில் இருக்கவிட்டு அவர்களுக்கு உதவியும் காசும் வீடுகளும் வழங்கியதோடு அவர்களுக்கு முன்னுரிமையும் அளித்துள்ளனர்.

சுனாமியாற் பாதிக்கப்பட்ட கல்லாறு அகதிகள் முகாமில் சுண்டிக்குளம் வாசிகளைக் குடியிருத்தியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல பாதிப்புக்கு உள்ளாகாத நாகேந்திரபுரக் கிராமவாசிகளுக்கு தங்குமிட வசதிகள நிவாரணப் பொருட்கள் காசு மானியம் என்பன அளிக்கப்படுகிறது இதேமாதிரி மருதங்கேணி அகதி முகாமில் பாதிக்கப்பட்டவர்களும் பாதிக்கப்படாதவர்களும் இருக்கவிடப்பட்டு சாதகமான சலுகைகள் வழங்கப்படுகின்றன.

இதிலிருந்து என்ன விளங்குகிறதென்றால் புலிக்கு நெருக்கமானவர்களுக்கு முன்னுரிமையும் சலுகைகளும வழங்கப்படுகின்றன. அவர்கள் சுனாமியாற் பாதிக்கப்பட்டது பாதிக்கப்படாதது என்று பாராமல் வடக்கிலே புலிக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இல்லாதவர்களுக்கும் இந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக மாவீரர் குடும்பங்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இப்படியான ஓர வஞ்சகச் சலுகைகளும் வட-கிழக்கிலுள்ள அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் நிகழ்கின்றன.

இந்த அரசியல் செல்வாக்குச் சலுகைகள் வட-கீழ் மாகாணங்களில் மாத்திரம் நிகழவில்லை. இதே மாதிரி முன்னுரிமைகளும் அரசியல் செல்வாக்குச் சலுகைகளும் தெற்கிலேயும் நடக்கிறது.

### நிவாரணக் கூப்பன் களவாடுகை

சிறீலங்கா அரசாங்கம் சுனாமியாற் பாதிக்கப்பட்ட, நாட்டிலுள்ள எல்லோருக்கும் நிவாரணக் கூப்பன்களை வழங்கியுள்ளது. இந்தக் கூப்பன்கள் 34 கிழமைகளுக்கு வழங்கப்பட்டன. ஒவ்வொரு பாதிக்கப்பட்ட பிரஜையும் 375 ரூபா பெறுமதியான நிவாரணச் சாமான்களை ஒவ்வொரு கிழமையும் பெற உரிமை உடையவர்கள். இதைவிட 175ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களையும் ரூபா 200 பெறுமதியான உணவு வகைகளற்ற பொருட்களையும் அரசாங்க சங்கக் கடைகளில் வாங்கலாம்.

புலிக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில எண்ணற்ற மக்களிடம் அவர்களுக்கு உரிமையுள்ள கூப்பன்கள் களவாடப் பட்டதை எங்களது களவிசாரணைகள் தெளிவுபடுத்துகின்றன. இந்த களவாடல்கள் இடத்துக்கிடம் சீரான களவாடல்களாக இல்லாமல் சீரற்ற களவாடல்களாகவே இருக்கின்றன. சில அகதிகள் முகாமில் நிவாரணங்கள் விநியோகிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு கூப்பன்களிலிருந்தும் 8 கிழமைகளுக்கான கூப்பன் புள்ளிகள் வெட்டப்பட்டே கையளிக்கப்பட்டன. சில இடங்களில் ஒவ்வொரு கூப்பனிலிருந்தும் 6 கிழமைகளுக்கான கூப்பன் புள்ளிகளும், சில இடங்களில் ஒவ்வொரு கூப்பன்களிலிருந்தும் 4 கிழமைக்கான புள்ளிகளும் வெட்டப்பட்டபின்பே கையளிக்கப்பட்டன. சில அகதிகள் முகாமில் எந்தவொரு புள்ளியும் வெட்டப்படாமல கையளிக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு மருதங்கேணி அகதிகள் முகாமல் சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களின் கூப்பன் புள்ளிகள் எதுவும் வெட்டப்படாமல் கையளிக்கப் பட்டன. சுனாமியாற் பாதிக்கப்படாது அகதிகளாய் வந்தவர்களின் கூப்பன் புள்ளிகள் களவாடப்படாமல் முழுவதும் கையளிக்கப்பட்டுள்ளன.

நிவாரணக் கூப்பன்களுக்காக அரிசி, மா, பருப்பு வகைகள், சீனி, பால்மா என்பன வழங்கப்பட்டன. முரண்பாடு என்னவெனில் பிரதான அரிசி விளையும் பிரதேசமான கிளிநொச்சியில் கல்லாறு அகதி முகாமில் அரசி வழங்காது தனித்துக் கோதுமை மாவே வழங்கப்பட்டன. இதற்குக் காரணம் என்னவெனில் புலிகளிடம் இருப்பில் ஏராளமான காலாவதியாகிப் போன கோதுமை மா குப்பையிற் கொட்ட வேண்டிய மா இருந்தது. அதையே அவர்கள் மக்களிடம் விநியோகித்தார்கள்.

கடந்த வருடம் செப்டம்பரிலிருந்து 6,000,00 மக்கள் வசிக்கும் யாழ்பாணப் பிரதேசத்தில் கோதுமை மா விநியோகத்தின் ஏகபோக உரிமை புலிகளுக்கே இருந்தது. பேக்கரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் புலிகளே கோதுமை மாவை விநியோகித்தனர். பல கிழமைகளாகத் தங்களுக்கு காலாவாதியாகிப் போன கோதுமை மாவே விநியோகிக்கப் படுகிறதென்று கல்லாறு முகாமிலுள்ள அகதிகள் முறையிட்டார்கள்.

செப்டெம்பர் 2004 முன் பாவிக்கப்பட வேண்டியவற்றை இப்பொழுதே விநியோகிக்கிறார்கள் என்று. கட்டைகாடு முகாமில் சீரற்ற முறையிலேயே உணவுப் பொருட்கள் தங்களுக்கு விநியோகிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்கள். 100 ரூபாய் பெறுமதியான உணவு வகைகளும் 75 ரூபா பெறுமதியான மற்றைய சாமான்களுமே விநியோகித்துள்ளனர். எஞ்சிய 200 ரூபா பெறுமதியானவற்றைப் புலிகள் பலவந்தமாக அபகரித்துள்ளனர். சில முகாம்களில் 200 ரூபா பெறுமதியான உணவு வகை அல்லாத பொருட்களைப் பெற்றுக் கொள்ளப்பட முடியவில்லை. சங்கக் கடைகளிலே இப் பொருட்கள் எப்பொழுதுமே இல்லாத பொருட்களாக உள்ளன.

வட-கீழ் மாகாணத்திலுள்ள சங்கக் கடைகள் எல்லாம் புலிப் பினாமிகளாலேயே நடாத்தப்படுவன. முகாம்களில் உள்ளவர்கள் இந்தச் சவர்க்காரம் மண்ணெண்ணை முதலிய உணவுவகையல்லாத தங்களுக்கு உரிமையான சாமான்களைத் தராமல், புலி தங்களைப் பழிவாங்கித் தண்டிப்பதாகவே உணருகின்றனர்.

சங்கதி என்னவென்றால் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள சுனாமியாற் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தும் நிவாரணக் கூப்பன்கள் களவாடப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. இதனோடு கீழ்மாகாணத்திலும் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் புலிக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் இப்படியான ஊழல்கள் நிலவுவதாக செய்திகள் கிடைக்கின்றன. இதை எங்களால் ஆதார பூர்வமாக நிறுவ முடியவில்லை. சிலர் தங்களின் உணவுகளின் ஒருபகுதியை விற்று தேங்காய், உப்பு, வெங்காயம் மிளகாய் போன்றவற்றை வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

### காசுமானியத்தைக் குறைத்துக் கொடுத்தல

இலங்கை அரசாங்கம் சுனாமியிற் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் சமையற் பாத்திரங்கள் வாங்குவதற்கென உடனடி நிவாரண நிதியாக ரூபா 2500 வழங்கியது. யாழ்பாணத்திலுள்ள அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வடமராட்சி வடக்கிலும் கிழக்கிலும் ஒவ்வொரு பாதிக்கப்பட்ட குடும்பங்களும் 1500 ரூபா மாத்திரமே பெற்றுக்கொண்டனர். இது ஏனெனில் புலி அங்குள்ள கிராம சேவை

தொடர்ச்சி 6ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர்களும்

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள், ஆதரவாளர்கள் என பல நூற்றுக்கணக் காவுகொள்ளப்பட்டிருக்கிறார்கள். தோழர்கள் இனங்களின் சுதந்திரம் சமூகங்களின் சமத்துவம், சுரண்டல் இல்லாத சமூக அமைப்பு சர்வதேச சகோ கனவு கண்டவர்கள். அவர்களை இந்நாளில் நினைவு கூருகிறோம். பல ஆயிரக்கணக்கான தோழர்கள் மறைந்து விட்டார்கள். சில முன்னோடிகள

## தோழர் பத்மநாபா



தேசிய விடுதலை சமூக விடுதலை, சர்வதேச சகோதரத்துவம், இந்தியாவுடன் நட்பு இவற்றை வலியுறுத்தி நின்றவர். எமது ஆசான் எமது வழிகாட்டி.

## தோழர் சிறிசபாரட்ணம்



ரெலோ தலைவர்- ஈழதேசிய விடுதலை போராட்டத்தின் முன்னோடி

## தலைவர் அமிர்தலி

தமிழர்களின் மனங்களில் 35 வருடங்கள சிம்மாசனம் போல் உட்கார்ந்திருந்தவர்.

## தோழர் உமாமகேஸ்வரன்



புளொட் இயக்கத் தலைவர் - ஈழ தேசிய விடுதலை, சமூக விடுதலை போராட்டங்களில் முன்னோடி

## தோழர் குமார்
### சண்முகநாத சிவம்



அம்பாறை தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த தோழர் குமார் ஈழ மாணவர் பொது மன்றத்தினூடாக தனது சமூக செயற்பாடுகளை ஆரம்பித்தவர். ஈ.பி.ஆர். எல்.எப் இன் மதிய குழு அங்கத்தவர். மட்டக்களப்பு அம்பாறை பிரதேசங்களில் மக்களை அணிதிரட்டல், விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். தோழர் களுக்கு கலந்துரையாடல் மற்றும் அரசியல் வகுப்புக் களை நடாத்தியவர். பேரினவாத அரச வன்முறையில் அவர் 1980 களின் நடுப்பகுதியில் கொல்லப்பட்டார்.

## தோழர் சின்னவ

திருமலை தம்பலகாமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். ஈழ புரட்சிகர விடுதலை முன்னணியில முன்னோடிகளில் ஒருவர். பாலஸ் இயக்கத்திடம் பயிற்சி பெற்றவர். பாசறைகளில் தோழர்களின் மன தோழர். காரைநகர் தாக்குதல் சம்பவத்தில் பலிகொள்ளப்பட்டார்

## தோழர் கொட்வின்



முல்லைத்தீவு பிரதேசத்தில் ஈழ மாணவர் பொதுமன்றத்தினூடாக இணைந்து கொண்டு சமூக அரசியல் பணிகளை ஆற்றியவர். 1980 களின் பிற்பகுதியில் படுகொலை செய்யப்பட்டார்.

## தோழர் ஜோர்ஜ்



ஐரோப்பாவில் குறிப்பாக ஜேர்மனியில் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர். லத்தீன் அமெரிக்க நாடுகளின் போராட்ட அனுப வங்களை நேரடியாகப் பெற்றவர். நிக்கரகுவா, கியூபாவிற்கு சென்று வந்தவர். திருமலையில் வடக்கு-கிழக்கு மாகாண அரச தலைமையகம் அமைவதற்கான கட்டமைப்பு வசதிகளை ஏற்படு த்துவதில் பங்களித்தவர். தமிழ் அராஜகத்தால் படுகொலை செய்யப்பட்டார்.

## தோழர் கபூ
### பாலசுப்பிரமணிய

கொழும்பில் 1977 இல் தமிழர்கள் இ யினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த பே சமூக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத் வர். 1983 இற்குப் பின்னர் யாழ்ப்பாணத் செய்தவர். 1980 களின் நடுப்பகுதியில் இயக்கம் தடை செய்யப்பட்ட போது கட இயக்கத்தின் படையமைப்பின் முக்கிய த ஒருவராகவும் கடமையாற்றியவர். எளிமை

## தோழர் நடேசலிங்கம்



வவுனியா பெரியதம்பனையை பிறப்பிடமாகக் கொண்டவர். 1970களின் பிற்பகுதியில் ஈழ மாணவர் பொதுமன்றத்தில் இணைந்து கொண்ட தோழர் நடேசலிங்கம் 1980 களின் முற்பகுதியிலேயே பேரினவாத ஒடுக்குமுறையாளர்களால் படுகொலை செய்யப்பட்டுவிட்டார்.

## தோழர் தேவகுமார்



அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தோழர் 1983 வெலிகடைச் சிறைப்படுகொலையில் கொல்லப்பட்டார்

## தோழர் V.A. கந்தச

இலங்கையின் இடதுசாரி இயக்கத்திலும் யாழ் குடாநாட்டின் தீண்டாமை ஒழிப்பு இயக்கங்களி மிக நீண்டகாலம் பணியாற்றியவர். மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் பிற்கால கட்டத்தில் இணைந்து கொண்ட இவர் 1992 மாரடைப்பால் உயிர் நீத்தார்.

## தோழர் ஜசிந்தா



மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில் அரசியல் சமூக வேலைகளில் ஈடுபட்ட தோழர், இவர் தோழர் பத்மநாபா உட்பட பன்னிரு தோழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது பலியானார்.

## தோழர் சாந்தி



இவர் திருமலையை பிறப்பிடமாகக் கொண டவர். இவரது குடும்பம் 1970 களின் நடுப்பகுதியில் இருந்தே தேசிய விடுதலையில் ஈடுபாடு செலுத்தியது. இவர் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இணைந்து திருமலை யிலும், யாழப்பாணத்திலும் வேலை செய்தவர். தோழர் ஜோர்ஜ் அவர்களை தனது வாழ்க்கைத்துணையாக வரிந்து கொண்டவர். 1990 களின் ஆரம்பத்தில் இருந்த பயங்கரமான சூழ்நிலையில் இவர் பேரினவாத சக்திகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

## தோழர் பெஞ்சமி

மலையகத்தில் இருந்து தேசிய ஒடுக் எதிராகவும் மலையக மக்களின் அடிமை எதிராகவும் போராட புறப்பட்ட தோழர் அறிவும் ஆற்றலும் தீர்க்கதரிசனமும் நி இளைஞன். தமிழகத்திலும் யாழ்ப்பாணத் கத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் தார். அவர் தோழர்கள் சமூகத்தில் யுத்த காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்ப ஈடுபாட்டுடன் ஈடுபட்டார். 1986 இன் இறுதி இவரும் அராஜகத்தினால் வீழ்த்தப்பட்டா

## நீலன் திருச்செல்வம்



கலாநிதி நீலன்திருச்செல்வம் இலங்கையில் அரசியல் யாப்பை ஜனநாயக மயப்படுத்துவதில் பங்களிப்பு செய்தவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற அங்கத்தவர் புலிகளின் தற்கொலைத் தாரியால் கொல்லப்பட்டார்.

## சரோஜினி யோகேஸ்வரன்



சகல நம்பிக்கைகளும் தகர்ந்துபோன நிலையிலும் மீண்டும் வாழ்வின் மலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தன்னை அர்ப்பணித்தவர்.

## தோழர் முகுந்த

யாழ் வட்டுக்கோட்டையை பிற கொண்டவர். பேராதனை பல்கலை விவசாய விஞ்ஞானபீட விரிவு இருந்தவர். சமூக பொருளாதார விவகாரங்களில் ஞானமுள்ளவர். 19 முற்பகுதியில் தமிழ் பாசிசவா கடத்தப்பட்டு கொல்லப்பட்டார். எ அர்ப்பணமும் கொண்ட தோழர்.

## தோழர் யோகசங்கரி



இவர் லண்டனில் ஈழ மாணவர் பொதுமன்றத்தினூடாக தனது அரசியல் சமூகப் பணிகளை ஆரம்பித்தவர். சர்வதேச விடுதலை அமைப்புக்களுடன் தொடர்புகளை வைத்திருந்தவர். இலங்கை பாராளுமன்றத்தில் அங்கத்தவராகவும் இருந்தவர்.

## தோழர் இமாம்



இவர் தென்மராட்சியில் இருந்து இயக்கத்தில் இணைந்து கொண்டவர். தென்மராட்சிப் பகுதியிலும் குறிப்பாக யாழ் குடாநாட்டிலும் அரசியல் சமூகப் பணிகளில் ஈடுபட்டவர். இந்தியாவிலிருந்து படகில் திரும்பிக் கொண்டிருந்தபோது வேறு பல தோழர்களுடன் படகு கவிழ்ந்து மரணமானார்.

## தோழர் கணேசமூர்த்தி (ராசி

அம்பாறை காரதீவை பிறப் கொண்ட தோழர் ராசிக் 1980 க நடுப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எப் இ இணைந்து கொண்டவர். 1990 க பிற்பகுதியில் புலிகளின் தற்கொ குண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்டார்.

**புலிகளால் நாம் தடை செய்யப்பட்ட போது வீதிகளில் சிதைந்தழிந்து போன எம் தோழர்க இப்பிரபஞ்ச பெருவெளியில் மறைந்துபோன எம் தோழர்கள், தோழியர் போராட்டகாரர்கள்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நினைவுகளுடனும்

...னக்கானோர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பேரினவாத அரசு அடக்குமுறையில் இருந்து புலி பாசிசம் வரை எமது தோழர்கள் ...சகோதரத்துவம் என்னும் உயரிய இலட்சியங்களை கொண்டிருந்தவர்கள். மானிடத்தை நேசித்தவர்கள். மகிழ்ச்சியான மனித குல எதிர்காலத்தை ...களின் நினைவுக் குறிப்புக்கள் இடம்பெருகின்றன. தொடர்ந்தும் அனைத்துத் தோழர்களினதும் முகங்களை வெளிக்கொணர முயற்சிப்போம்.

## ...லிங்கம்



...கள்

## ...வன்




...ழ மக்கள்
...ியின்
...லஸ்தீன
...வர்.
...மனங்கவர்ந்த
...
...டார்.

## ...தூர்
...ியம்



...ள் இன வன்முறை
...த போது தன்னை
...டுத்திக் கொண்ட
...ணத்தில் வேலை
...யில் புலிகளால்
...் கடத்தப்பட்டார்.
...ய தலைவர்களில்
...ிமையும் அர்ப்பணமும் நிறைந்த தோழர்.

## ...தசாமி




...ாரி
...டின்
...ளிலும்
...பவர். ஈழ
...
...ததில்
...92 இல்

## ...மின்



...ஒடுக்குமுறைக்கு
...மை வாழ்வுக்கு
...ழர் பெஞ்சமின்
...ம் நிறைந்த ஒரு
...ணத்திலும் சமூ
...ிகளில் ஈடுபட்டிருந்
...புத்த காலத்தில்
...ரிப்பதில் மிகுந்த
...றுதிப் பகுதியில்
...்டார்.

## ...தன்



...பிறப்பிடமாகக்
...லைகழகத்தில்
...வுரையாளராக
...தார அரசியல்
...். 1990 களின்
...சவாதிகளால்
...். எளிமையும்

## ...ரசிக்)



...பிறப்பிடமாகக்
...0 களின்
...் இல்
...0 களின்
...கொலை

## ரஜனி திரணகம



ஈழ போராட்டத்தினதும் அதன் தார்மீக தகுதி தொடர்பாகவும் வெவ்வேறு ஆதிக்க சக்திகள் தொடர்பாகவும் மனித உரிமை கண்ணோட்டத்தில் விமர்சனங்களை மேற் கொண்டவர். சமூகம், பெண்கள் தொடர்பான ஈடுபாட்டை கொண்டிருந்தார். வரலாற்று நிகழ் வுகளை விமர்சனபூர்வமாக பதிவுசெய்வதில் ஈடுபட்டவர்.

## தோழர் ஐயா
### வேதநாயகம் பத்தின்பநாயகம்



இவர் 1970 களின் முற்பகுதியில் தனது சமூக அரசியல் பணிகளை ஆரம்பித்தவர். புலம் பெயர்ந்துவந்த மலையக மக்களை வன்னிப் பகுதியில் குடியமர்துவதில் பங்களித் தவர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யின் மத்தியகுழு உறுப்பினர். 1980களின் நடுப் பகுதியில் அராஜகத்தின் நீட்சியில் கொல்லப் பட்டார்.

## தோழர் சிவா



இவர் பெரிய கல்லாற்றை பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் நீள அகலங்களில் அலைந்து திரிந்து வேலை செய்தவர். 1980 களின் நடுப்பகுதியில் பேரினவாத அடக்குமுறையாளர்களால் கொல்லப்பட்டார்.

## தோழர் அமீன்



இவர் சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ் குடா நாட்டில் அரசியல் சமூக பணிகளில் ஈடுபட்டவர் 1980 களின் நடுப்பகுதியில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

## தோழர் கவிதா



மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில் அரசியல் சமூக வேலைகளில் ஈடுபட்ட தோழர், இவர் தோழர் பத்மநாபா உட்பட பன்னிரு தோழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது பலியானார்.

## தோழர் பாலா



இவர் மட்டக்களப்பு வந்தாறுமூலையை பிறப்பிடமாகக் கொண்டவர். ஈழ மாணவர் பொதுமன்றத்தினூடாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை ஸ்தாபித்த முன்னோடிகளில் ஒருவராவார். 1980 களின் நடுப்பகுதியில் காட்டுப்பகுதி ஒன்றில் பாம்பு தீண்டி உயிரிழந்தார்.

## தோழர் தைரி



இவர் கல்முனையை பிறப்பிடமாகக் கொண்டவர். ஈழ மாணவர் பொது மன்றத்தினூடாக சமூக அரசியல் வேலைகளில் ஈடுபட்ட தோழர் தைரி பல்வேறு சவால்களை எதிர்நோக்கியவர். ஈற்றில் 1980 களின் பிற்பகுதியில் தமிழ் அராஜகத்திற்கு பலியானார்.

## தோழர் றொபேட்



தோழர் பத்மநாபாவிற்குப் பின்னர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை வழிநடத்திச் செல்வதில் பெரும் பங்கு வகித் தவர். ஜனநாயகத்தையும், மனித உரிமையை யும் தமிழ் சமூகத்தினுள் நிலைநாட்டுவதில் தன்னை அர்ப்பணித்தவர் புலிகளால் நயவஞ் சகமாக படுகொலை செய்யப்பட்டவர்

## தோழர் றேகன்



இவர் வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்டவர். பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெற்றவர். வவுனியா பகுதியில் மக்களை அணிதிரட்டும் பணிகளில் ஈடுபட்டிருந்தவர். 1980 களின் நடுப்பகுதியில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

## தோழர் கிருபா



அம்பாறை காரைதீவை பிறப்பிடமாகக் கொண்டவா 1980 களின் முற்பகுதியில் இருந்தே ஈழ மாணவர் பொதுமன்றத்தினூடாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் பிரவேசித்தவர். வடக்கு-கிழக்கு மாகாண சபையில் நிதியமைச்சராக இருந்தவர். தோழர் பத்மநாபவுடன் பன்னிரு தோழர்கள் படு கொலை செய்யப்பட்டபோது தோழர் கிருபாவும் படுகொலை செய்யப்பட்டார்.

## தோழர் அன்பரசன்



மலையகம் பொகவந்தலாவ பிறப்பிடமாகக் கொண்டவர். 80களின் முற்பகுதியில் ஈழ மக்கள் புரட்சிகர புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து கொண்ட தோழர் அன்பரசன் தமிழகத்திலும் மலைய கத்திலும் வடக்கிலும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திலும் மலையக மக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்துவதிலும் பங்களித்திருந்தார். 80 களின் நடுப்பகுதியில் தமிழ் அராஜகத்துக்கு பலியானார். மாற்று இயக்கங்களை புலிகள் தடைசெய்தபோது.

## தோழர் சாம் தம்பிமுத்து



தமிழரசு கட்சி, த.வி.கூ ஊடாக அரசியல் பிரவேசத்தை மேற்கொண்ட திரு சாம் தம்பிமுத்து அவர்கள் பிற்கால கட்டத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து கொண்டார். மனித உரிமை அமைப்புக்களிலும் அவர் செயற்பட் டிருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

## தோழர் மிஹிலர்



இவர் அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் இல் பிரவேசித்தார். 1990 இல் தோழர் பத்மநாபாவும் பன்னிரு தோழர்களும் சென்னையில் படுகொலை செய்யப்பட்டபோது இவரும் பலிகொள்ளப்பட்டார்.

## தோழர் ஷோபா



ஈ.பி.ஆர்.எல்.எப் இன் முதல் ஆயுதப் பெண்போராளி இவர் 1980 களின் நடுப்பகுதியில் காரைநகரில் தாக்குதல் ஒன்றில் பலியானார்.

...களுக்கும் தோழியருக்கும் எம் அஞ்சலிகள்.
...ள், பொதுமக்கள் அனைவருக்கும் எம் இதய அஞ்சலிகள்.

தியாகிகளின் படங்கள் அவர்களை பற்றிய குறிப்புக்கள் தொடர்ந்து கண்ணோட்டத்தில் இடம்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியின் பெயரால் புலிகள் ..............

யாளர்களுக்கு ஆயிரம் ரூபாவைப் பிடித்துக்கொண்டு 1500 ரூபா மாத்திரமே வழங்கப்பட வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளது.

துரதிஷ்டம் வாய்ந்த ஒவ்வொரு பாதிக்கப்பட்ட குடும்பங்களிடமும் 1000 ரூபா வீதம் புலி களவாடியது. இந்தக் காசு களவாடல் புலிக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறவில்லை. இப்படியான காசு களவாடல் கிழக்கிலுள்ள அரசகட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுமில்லை. சுனாமியாற் பாதிக்கப்பட்ட அகதி முகாங்கள் உள்ள பிரதேசங்களில் களஆய்வுகள் மேற்கொண்ட இடங்களில் அதிகமானவர்கள் தற்காலிமான வீடுகளைப் பெற்றுள்ளார்கள். ஒருசிலரே இன்னும் கூடாரங்களில் வசிக்கிறார்கள்.

இருந்த போதும் பாதிக்கப்பட்ட கோவில் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்ட தற்காலிக வீடுகளுக்கான கூரைகளை அவர்களைப் போடும்படி TRO சொல்லி அதற்கான பணத்தைத் தாம் தருவதாகவும் கூறியது. TRO சொன்ன அந்தப் பணத்தை இன்னும் தங்களிடம் தரவில்லையென்றும குற்றம் சாட்டியுள்ளனர். அது மாத்திரமல்ல கட்டிக் கொடுத்த வீடுகளிலும் இடத்துக்கு இடம் வித்தியாசம் உள்ளது. TRO வினால் கோவில், கட்டைக்காடு, மருதங்கேணி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட தற்காலிக வீடுகள் அத்திவாரமில்லாத ஆனால் கொங்கிறீற் நிலம் போடப்பட்ட 3 அடி கொங்கிறீற் சுவருள்ள வீடுகளே கட்டிக் கொடுக்கப்பட்டன. அதன் பின்பு மெல்லிய இரும்புக்கம்பிகளை கப்புகளாக்கி கிடுகுக் கூரை போடப்பட்டுள்ளது. கதவு மெல்லிய தகரத்தினால் ஆனது.

ஆனால் கல்லாறறில் தெற்கிலுள்ள சேவாலங்கா NGO வால் கட்டப்பட்ட தற்காலிக வீடுகள் கொங்கீறீற்றாலான பலமான அத்திவாரமும் நிலமும் கூரைமட்டுமான முழுச் சுவர்களும் போடப்பட்டு கிடுகினால் வேய்ந்தும் கொடுக்கப்பட்டது. கதவுகள் மரத்தினாலான பலமானவையாகும். சுனாமியாற் பாதிக்கப்பட்ட கோவில், கட்டைகாடு, மருதங்கேணி மக்கள் தங்களது தரமற்ற தற்காலிக வீடுகளையிட்டுத் திருப்திப்படவில்லை. வீடுகளையிட்டு இவர்கள் திருப்திப்படவில்லையென்று சொல்லத் தேவையுமில்லை. இந்த வீடுகளுக்கு TRO 45,000 ரூபா செலவிட்டதென்பதை அவர்களால் நம்ப முடியவில்லை. வீடுகள் கட்டுவதற்கு முன்னதாக அத்திகளோடு TRO கலந்தாலோசிக்கக் கூடவில்லை. நிவாரண உதவி வழங்கியவர்கள் பெப்ரவரி 2005 இல் சென்று விசாரித்தபோது அவர்களோடு வீடு கட்டுவதற்கு முன் கலந்தாலோசிக்கவில்லை யென தெரிய வந்தது.

## புலியின் முகஸ்துதி

புலி, வறுமையில் வாடும் இந்த மக்களை வரிசைக்கிரமமான நிறுவனக்கொள்ளையை செய்யும் உண்மையான களநிலவரம் இருக்கத்தக்கதாக சிறிலங்காவிலும் வெளிநாடுகளிலுமுள்ள சிலர் புலியையும் TRO வையும் புகழ்ந்து அவர்களது மகத்தான அல்லது திறமைவாய்ந்த சேவைகளைச் செய்தார்கள் என்று பாராட்டியுள்ளார்கள் இவர்களின் மகத்தான சேவைகளாலேயே சுனாமியின் பின் வட-கீழ் மாகாணங்களில் மாமூல் நிலை ஏற்படுத்தப்பட்டதாக எழுதியுள்ளனர். அப்படியான அண்மைக்கால இரண்டு கட்டுரைகளை மதிப்பட்டு விமர்சனம் செய்கிறேன்.

Stokke யும் சண்முகரத்தினமும், சிறுபிள்ளைத்தனமாக புலி ஒரு சமாந்தரமான அரச ஆதிக்கமென்றும், அது சொந்த இராணுவத்தையும் பொலிசையும் நீதிபரிபாலனத்தையும், பொது நிருவாகத்தையும் வரிவாங்கும் அமைப்பையும் வைத்திருப்பதாக எழுதுகின்றனர். உண்மை என்னவெனில் புலி ஒரு சமாந்தரமான அரச அமைப்பல்ல. அவர்கள் தாம் எந்த மக்களை ஆளுகின்றோமென்று நினைக்கிறார்களோ, அவர்கள், இவர்களுக்கு அரச அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. கட்டாயம் அது ஓர் சக்திவாய்ந்த இராணுவ அமைப்பு. அதைத் தவிர அது வேறொன்றுமில்லை. அவர்கள் சொல்லும் நிர்வாகப் பிரதேசம், வனப்பாதுகாப்புப் பிரிவு, சுகாதாரப் பிரிவு, கல்விக்கோட்டம் என்பன எல்லாம் இவர்களது இராணுவ அமைப்பின் அடிமைச் சேவகர்கள்தான். அவர்கள் ஒரு நாளும் பொதுஜன சேவையைச் செய்யவில்லை. இப்பிரிவுகளின் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லாம் சர்வதேச வளங்களைச் சுகிப்பதற்கான போலி விளம்பரங்கள், கற்றுக்குட்டி எழுத்தாளர்கள், கற்றுக்குட்டிப் பட்டதாரிகள். வழக்கமாகப் புலியின் இந்த வெவ்வேறு பிரிவுகளும் அரச நிர்வாகங்களுக்குள் லஞ்சங்கள மூலம் செல்வாக்கைப் பெற்று புலிக்குத் தேவையானவற்றைச் செய்பவைதான்.

ஆனால் புலியின் வரி இலாகாவும் சுங்கவரி இலாகாவும் உண்மையானதுதான். ஆனால் வரியும், தீர்வையும், அநியாயத் தண்டமும், பலாத்காரப் பறிப்பும்தான். இந்த வரியையும் தீர்வையையும் அறவிடும்படி புலிகளுக்கு தமிழ் மக்கள் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. அதனாடு புலியின் பொலிஸ்படை சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காகவல்ல.



அது புலிக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் துர்ப்பாக்கியத்தால் தற்செயலாக அவை மாட்டிக்கொண்ட அப்பாவித் தமிழ் மக்களைப் பயப்படுத்தி புலிக்கு அடங்கிப் பயத்தோடு வாழவிடும் கருவிதான்.

அது மாத்திரமல்ல. நீதிமன்றங்கள எல்லாம் சட்டவிரோத நிறுவனங்கள். அங்கு வாழும் பெரும்பான்மை மக்கள் அங்கீகரிக்காததுமாகும். புலிப் பிரிவுகளின் தலைமையகங்களெல்லாம் கிளிநொச்சி நகரத்தில் A9 பிரதான பாதையோரம் அமைந்துள்ளன. அவை உதவி வழங்கும் சமூகங்களுக்கும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்துவரும் பட்டதாரிகளுக்கும் பிரச்சாரம் செய்யும் பிரச்சார அடையாளமேயன்றி வேறொன்றல்ல. அந்த வழியால் போகும் புத்தி கூர்மையுள்ள எவரும் இதைக் கண்டுகொள்ளுவர்.

அதன் ஜன்னல்களெல்லாம் கறுத்தக் கண்ணாடியால் ஆனது. ஏனெனில அதற்குள்ளே என்ன நடைபெறுகின்றது என்று எவரும் கண்டு கொள்ளமுடியாது. இந்தத் தலைமையகங்களெல்லாம் எப்பொழுதும் வெறுமையாக இருக்கும் அன்றேல் சிலபேரோடு இருக்கும். தளபாடங்களோ, உபகரணங்களோ இருக்காது. புலியின் பொருளாதார அமைப்புக்களான PDS,TRO என்பவற்றின் காரியாலயங்கள் கறுத்தக் கண்ணாடியால் ஆன ஜன்னல்களையுடையது. ஏனெனில் தலைமையகம் என்று சொல்லப்படும் அவற்றின் வெற்றுத்தன்மையை மறைப்பதற்காகப் போடப்பட்டது. புலி ஒரு இராணுவ அமைப்பாக இருப்பதால எல்லோரும் பார்க்கக் கூடிய இந்தக் காரியாலயங்களில் எந்த ஆவணங்களையும் வைத்திருக்கவில்லை. ஏனெனில் மீண்டும் உள் நாட்டு யுத்தம் வெடிக்குமாக இருந்தால் இவைகளை எதிரிகள் இலகுவாகத் தாக்கி விடலாம்.

3ம் பக்கத் தொடர்ச்சி

சுனாமி ஏற்பட்டவுடன் TRO தலைவர் தமது நிறுவனத்தில் 3500 ஊழியர்கள் இருப்பதாகவும் 8000 தொண்டர்கள் இருப்பதாகவும் புளுகினார். (வீரகேசரி 6.1.2005) இதை எழுதுபவர் அறிந்ததன்படி இது பொய்ப்பிரச்சாரத்திற்காகும். TRO இதன் உண்மைத் தன்மையை வெகுசனங்களுக்கு நிறுவிக் காட்ட முடியவில்லை. ஆனால் TRO தலைமைக் காரியாலயமே சிறீலங்காவிலுள்ள பெரிய NGO காரியாலயமாகும். இது 2003 இல் கட்டப்பட்டது. சமாதானப் பரிசாக றோயல் நோர்வே அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.

புலி தனது ஆதிக்கத்தை உத்தியோக பூர்வமற்ற முறையில் வடகீழ் மாகாணத்தில் இலங்கை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள்ளும் விஸ்தரித்துள்ளது என்று Stokke யும் சண்முகரத்தினமும் சொல்லுவது உண்மைதான். இது 2002 பெப்ரவரியில் இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்டதனால் ஏற்பட்டதேயொழிய தமிழ் மக்கள் புலியை ஏற்றதால் அல்ல. இங்கு வாழும் மற்றய சமூகங்கள் அதை அறவே ஏற்கவில்லை.

வடகீழ் மாகாணங்களிலுள்ள அரசாங்க நிர்வாகிகளை புலி உத்தியோகபூர்வமற்ற முறையில் கட்டுப்படுத்துவதென்பது ஜனநாயகப் பிரதிநிதித்துவமுறை மூலம் அல்ல. மாறாக அதிகாரிகளை பயப்படுத்தியே கட்டுப்படுத்துகிறது. சாதாரண காலங்களிலே புலி வெளிநாட்டுத் தமிழர்களிடம் தமது லட்சியத்திற்கென்று விருப்பத்தோடு காசு சேர்த்ததென்பது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

சுனாமியை அடுத்து, புலிகளும் TRO வும் பாதிக்கப்பட்ட மக்கள் மேல் வெளிநாட்டுத் தமிழர்களுக்கு ஏற்பட்ட அனுதாபத்தைச் சுரண்டி மிகக் கள்ளத்தனமாகப் பாவித்து லாபமடைந்தது. TRO 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டுத் தமிழர்களிடமிருந்தும் மற்றும் முகவர்களிடமிருந்தும் பெற்றுக் கொண்டது. (ஜெயசேகரா 2005) வெளிநாடுகளில் சேர்த்த நிதிகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லையாகும்.

தமிழ் மக்கள் புலியின் கொல்லும் கெட்டித்தனத்தையும் வரி தீர்வை என்ற பேரில் பலாத்காரமாகப் பறிக்கும் கெட்டித்தனத்தையும், பொய்ப்பிரச்சாரக் கெட்டித்தனத்தையுமே அறிவார்கள். (பொய்களையும் பிழையான திரித்த தகவல்களையும் மிகக் கெட்டித்தனமாகப் பரப்புவார்கள்).

வட-கீழ் மாகாணத்தில் வாழும் தமிழர்களுக்கு புலியின் தகுதிக் குறைவு நன்றாகவே விளங்கும். ஆனால் வெளிநாடுகளில் சில பட்டம் பெற்ற மேதாவிகளுக்கு அது விளங்காது. புலி எப்பவாவது தான் சட்ட விரோதமாகப் பறித்த வரிகளின் கணக்கு வழக்கை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு [illegible] புலியும் TRO வும் சுனாமிக்கென்று சேர்த்த காசுக் கணக்கை காட்டப்போகிறது.

சுனாமிக்கு முன்னால் சிறிலங்கா அரசியற் பிரமுகர்கள் தங்களுக்குள்ளே ஏற்பட்ட பிளவுகளை நிவர்த்தி செய்து ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு பல்தேசிய இனங்கள் வாழும் சிறீலங்காவின் இன்றைய சவால்களை எதிர்கொள்ளப் போகிறார்கள். இது சரியாகவே சொல்லப்பட்டது. அவர்கள், புலி தனது பாசிசப் போக்கைக் கைவிட்டு, தன்னை ஒரு அரசியல் அமைப்பாக ஆக்க வேண்டுமென்பதைச் சொல்லத் தவறிவிட்டார்கள். சமாதானம் என்பது புலியும் அரசாங்கமும் இணைந்தே செயற்படுத்தவல்லது.

உதவி வழங்குவதையும் புனருத்தாரண வேலைகளையும் அரசாங்கம் அரசியலாக்குவதன் மூலமும், அதிகாரத்தை மையப்படுத்துவதன் மூலமும் சமாதான நிகழ்வுப் போக்குக்கு குந்தகமானவற்றை செய்கிறதென்று சண்முகரத்தினம் மிகச் சரியாகவே சொல்லியுள்ளார்.

ஆனால் வட-கீழ் மாகாணத்திலே புலியும் TRO வும் செய்யும் அரசியலாக்கல் பற்றியும் அதிகாரம் மையப்படுத்தல் பற்றியும் எவருக்கும் தெரிவது போல் சொல்லவில்லை. மேலும் சண்முகரத்தினம் உதவி வேலைகளை இராணுவ வழிப்பட்டதாக்குகிறது அரசாங்கம் என்று குற்றம் சாட்டுகிறார். உலகம் முழுவதும் இயற்கை அனர்த்தம் நிகழ்ந்தவுடன் ஆயுதபாணியற்ற பாதுகாப்புப் படைகள் மற்றும் வெளிநாட்டுப் பாதுகாப்புப் படைகள் அழைக்கப்பட்டு மீட்புப் பணிகளிலும் உதவி வேலைகளிலும் செயற்படுத்தப்படுவது வழக்கமாகும். கிழக்கிலுள்ள அகதிகள் முகாம்களில் உதவிப் பொருட்கள் வழங்குவதற்கும் பாதுகாப்பு வழங்கும்படியும் அனாதைப் பிள்ளைகளைப் புலிகளால் கடத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கும்படியும் அரசாங்கம் நிராயுதபாணியான பாதுகாப்புப் படைகளிடம் கட்டளையிட்டது.

106 அனாதைப் பிள்ளைகளை புலிகள் வட-கீழ் மாகாணத்தில் கடத்தியதை யுனிசெவ் ஆவணப்படுத்தியுள்ளது. இவர்கள் இரு பெற்றோரை அல்லது தாயையோ, தகப்பனையோ இழந்தவர்களாகும். எனினும் நூற்றுக் கணக்கான பத்திரிகைகளில் வெளிவராத பிள்ளைகள் கடத்தல்கள் சுனாமியின் பிறகு இடம்பெற்றுள்ளன.

அதுமாத்திரமல்ல முல்லைத்தீவு கிளிநொச்சி மற்றும் புலிக் கட்டுப்பாட்டுப் பகுதியான வடமராட்சிக் கிழக்கில் கடற்புலிகளே மீட்பு வேலைகளையும் உதவி வேலைகளையும் செய்தார்கள். இது மாத்திரமல்ல கடற்புலிகள் சுனாமி நடந்து முடிந்தது தான் தாமதம் முல்லைத்தீவிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஆயிரம் ரூபாவைக் கொடுத்தார்கள் என்று கூறப் பட்டுள்ளது. அதுவுமல்லாமல் சுனாமி அழிவு ஏற்பட்டு ஒரு கிழமைக்கு மேலாக எந்த வொரு NGO, INGO, UN போன்ற உதவி நிறுவனங்களையோ முகவர்களையோ உதவி செய்வதற்கோ மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்கோ முல்லைத் தீவில் புலி விடவில்லை. இந்தத் தள உண்மை நிலவரத்தின் மத்தியில் உதவி புனருத்தாரண வேலைகளில் அரசாங்கம் இராணுவமயமாக்கல் செய்கிறதென்று சண்முகரத்தினம் முறையிடுகின்றார்.

சுனாமியை அடுத்து வழங்கிய நிவாரணப் பொருட்களில் சிறிலங்கா முழுவதும் ஊழல்கள் எற்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது. இங்கே அனேக உதவி நிறுவனங்கள் இந்த ஊழல்களைச் செய்கின்றன. தெற்கிலே தனிப்பட்டவர்களின் பேராசையினால் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் NGO /INGO காரர்கள் இந்த ஊழல்களைச் செய்தார்கள். வட-கீழ் மாகாணத்தில் புலியே ஊழலைச் செய்யும்படி தூண்டியது. கிழக்கிலே புலிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் NGO/INGO காரர்கள் எல்லோருமே ஊழல் வேலைகளைச் செய்தார்கள். வடக்கிலே ஊழல் புலிகளின் ஏகபோக உரிமையாக இருந்தது (அதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களாலும் TRO வினாலும் செய்யப்பட்டது.

இப்போது இலங்கையின் ஊழலின காரணமாக NGO/ INGO களுக்கு எதிரான போராட்டங்கள் வெடித்துள்ளன. அது சுனாமியின் பின் மதமாற்ற வேலைகளில் இவர்கள் ஈடுபட்டதற்கு எதிராகப் போராட்டங்கள் நிகழ்கின்றன. சுனாமி நடந்து முடிந்தவுடன் நிவாரணப் பொருட்கள் என்றபேரில் வெளிநாடுகளிலிருந்து இராணுவத்தளபாடங்கள் அடங்கிய கொள்கலன்கள் அனுப்பப்பட்டதை சுங்க இலாக கண்டுபிடித்தது.

இதில் இரண்டு ஹெலிகொப்டர்கள் பாகங்களாகக் கழற்றி கொள்கலன்களில் வைத்து அனுப்பப்பட்டது. இந்தக் ஹெலிகொப்டர்கள் வடக்கிலே செயற்படும் புலிசார்பு NGO களுக்கே அனுப்பப்பட்டது. வேறு TRO வுக்கும் இராணுவத் தளபாடங்களும் குண்டுகளும் வெளிநாடுகளிலிருந்து வந்ததென்று உள்நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்தது. இன்றுவரை இதற்கு எதிராக TRO மறுப்பறிக்கை விடவில்லை.

மார்ச் நடுப்பகுதியிலே பொற்கொல்லர்கள் தங்கங்களைக் கொழும்பிலிருந்தோ வெளிநாடுகளிலிருந்தோ யாழ்ப்பாணத்திற்கு விலைக்கு வாங்கிக் கொண்டுவரக் கூடாதென்று புலி கட்டளையிட்டது. யாழ்ப்பாணத்துப் பொற்கொல்லர்கள் ஆபரணங்கள் செய்வதற்கு வேண்டிய தங்கங்களை புலிகளிடமே விலைக்கு வாங்க வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப் பட்டது. இன்று வடக்கில் தங்க விற்பனையின் மொத்த ஏகபோகம் புலிகளிடம் உளளது. இது சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களிடம் களவாடப்பட்ட நகைகள் ஆதலால் அவற்றை உடனடியாக விற்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதென்றே சந்தேகிக்கப்படுகின்றது.

இன்று இலங்கையில் அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகங்களுக்கும் வட-கீழ்மாகாணத்திற்கு செய்யப்படும் சுனாமி உதவிகளயும் சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களிடம் எந்த வித பயமும் இன்றியும் ஓரவஞ்சக மின்றியும் கொடுக்கக் கூடிய நிலமை ஏற்படுத்தப் படவேண்டுமென்பதற்கான காலம் கனிந்துவிட்டது.

கடந்த கிழமைகளில் இந்த ஆய்வுக்கான செவ்விகளை மேற்கொண்டவர்கள் சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினூடோ, புலிகளினூடோ, NGO களினூடோ TRO வினூடோ கொடுக்காமல் நேரடியாக கொடுக்கவேண்டுமென்றே கூறுகிறார்கள். ஆதலால் நிவாரணம் வழங்கும் முகவர்கள் நிவாரண உதவிகளை புலியினூடாகவும் அரசாங்கத்தினூடாகவும் வழங்காமல் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்யக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் அரசாங்கமோ புலிகளோ இந்தக் கடமையைச் செய்ய லாயக்கற்றவர்கள் என்பது இன்று நிருபணமாகியுள்ளது.

சுனாமியாற் பாதிக்கப்பட்டு வட-கீழ் மாகாண மக்கள் புலிக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளடங்கலாக உதவி பெறுவதற்கு அத்தனை உரிமையுடையவர்களாகும். இது புலியினூடோ, புலி இல்லாமலோ புலியைச் சடடை செய்யாமலோ அவர்களுக்கு அந்த உதவி உடனடியாகத் தேவை.

*- கலாநிதி சர்வானந்தர் முத்துக் கிருஷ்ணன்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி யின் 40வது வருட வரலாற்று கண்காட்சியும், கலை நிகழ்ச்சிகளும்

சிலவாரங்களுக்கு முன்னர் ஜே.வி.பி தனது கட்சியின் வரலாறு 60 களின் நடுப்பகுதியில் இருந்து இலங்கையில் நடைபெற்ற சமூக, அரசியல், பொருளாதார நிகழ்வுகளை காட்சிப் படுத்தும் நிகழ்ச்சியொன்றை கொழும்பில் ஜோன்.டி. சில்வா அரங்கிற்கு அருகில் ஏற்பாடு செய்திருந்து.

கடந்த காலத்தில் இலங்கையின் இடதுசாரி கட்சிகள் இத்தகைய காட்சிப்படுத்தல் ஒன்றை செய்திருக்கக்கூடும். ஆனால் சமகாலத்தில் ஜே.வி.பி தனது பயணத்தை ஓரளவேனும் புதிய தலைமுறையினருக்கு விளங்க வைக்க முயற்சி செய்திருக்கிறது.

அவர்களுடைய காடசிப்படுத்தலில் மனித உரிமைகள், பயங்கரவாதத் தடைச்சட்டம், சிறை, சித்திரவதை போன்ற விடயங்கள் வெவ்வேறு கால கட்டங்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

ஜே.ஆர் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தனது ஆட்சி அதிகாரத்தை நீடித்துக்கொள்ள முயன்ற போது ஜே.வி.பி அதற்கெதிரான அரசியல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டது போன்ற தொடர்பான படங்கள், மற்றும் காட்சிகள் போன்றன.

1983 இனவன்முறையில் கட்சி தடை செய்யப்படுவது. 1980 களின் இறுதிப்பகுதியில் தெற்கில் நடந்த படுகொலைகள் போன்றன சித்தரிக்கப்பட்டன.

ரோஹண விஜேவீராவின் வரலாறு தங்காலை வீடு, பாடசாலை, லுமும்பா பல்கலைகழகத்திற்குச் செல்வது, 60 களின் நடுப்பகுதியில் இலங்கை வருவது, தோழர் சண்முகதாசன் அவர்களுடன் இணைநது வேலை செய்வது, பின்னர் ஏழு பேர் கொண்ட தலைமை குழுவை அமைப்பது, 1960 களின் பிற்பகுதியில் ஐக்கிய முன்னணி ஆட்சி அமைப்பதற்கு ஆதரவளிப்பதென தீர்மானித்தல், 1971 ஆயுதபுரட்சி பற்றிய ஆயுதங்கள் காட்சிப்படுத்தல்கள், ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட பிரசுரம், பத்திரிகைகள், சிறையில் மத்தியகுழுவை தெரிவு செய்தல், இரத்தம் விற்று பத்திரிகை கொண்டுவருதல், விஜய வீராவின் விடுதலை என்பனவும்.

சுவையான சில சமூக பொருளாதார தகவல்களும், காட்சிப்படுத்தப்பட்டன. அப்போது 60களின் முற்பகுதில கிராமப்புறத்துக் கடைகள் எப்படியிருந்தன, விலைவாசி எப்படியிருந்தது, வாழ்க்கை எப்படி இருந்தது, போன்றனவும் சித்தரிக்கப்பட்டிருந்தன.

அவர்களின் கலை நிகழ்ச்சிகளை அவதானித்ததில் பால் சமத்துவம் காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், தோட்டத் தொழிலாளர்கள் அவர்களின் வாழ்க்கை, திரையில் காட்சிப்படுத்தப்பட்டதோடு ஜே.வி.யியின் கலைஞர்கள் நாடக அசைவுகளை திரைக்காட்சிப் படுத்தலுடன் இசைவுபடுத்தி மேற்கொண்டனர். அவர்களின் விடுதலை கீதங்கள் இசைக்கப்பட்டன. இது எங்கள் தாயகம், இது எங்கள் கட்சி என்பது மகுட வாசகமாக காணப்பட்டது. ஜே.வி.பிக்கு ஆதரவளிக்கும் மக்கள் ஒரு குடும்பம் போலவே செயற்படுகிறார்கள். அமைதியாக நிகழ்ச்சிகளில் அவர்கள் ஈடுபாடு செலுத்தினார்கள்.

தொழிலாளர், விவசாயிகள், பெண்களுடைய பிரச்சினைகள் பற்றிய பொருள் பொதிந்த பாடல்களுடன் சூழலியல், பிரச்சினைகள், தண்ணீரை வெளிநாட்டவருக்கு விற்கும் பிரச்சினைகள், எப்பாவெல பொஸ்பேற்று தொழிற்சாலையால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியெல்லாம் கலை நிகழ்ச்சியில் அரங்கேற்றினார்கள்.

இனப்பிரச்சினை சித்தரிக்கப்படவில்லை. ஆனால் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்ற பேதம் இல்லை என்ற பாடல்கள் பாடபெற்றன. வடக்கு போர்க்களங்களில் இருந்து ஆயுதங்களை விட்டெறிந்துவிட்டு இராணுவ உடையுடன் ஓடிவருபவர்கள் எல்லோரும் கடைசியில் செந்நிறக் கொடியுடன் புறப்படுவது சித்தரிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி ஒரு தேங்கிய குட்டையல்ல. அதனுள் புதுப்புனல் பாய்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஓடும் நீரை திரும்ப அதேயிடத்தில் அள்ளமுடியாது என்று ஹெகல் கூறுவார். ஜே.வி.பியில் சத்திய ஆவேசம் கொண்ட கிராமப்புறத்திலிருந்தும், நகர்ப்புறத்திலிருந்தும் வறிய இளைஞர்கள் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

ஜே.வி.பி யின் காட்சிப்படுத்தலில் அவர்களில் இன்னும் கணிசமான முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. சகல முற்போக்கு சக்திகளையும் இணைத்துக் கொள்ளும் இடைவெளி காணப்படுகிறது.

இனப்பிரச்சினை தொடர்பாக கடந்தகால பார்வைகள் செயற்பாடுகள் தொடர்பாக இன்னும் பல மீளாய்வுகளை அவர்கள் செய்யவேண்டியிருக்கிறது. அவர்களின் நகழ்ச்சிகள் பெரும்பாலானவை சிங்கள மொழியிலேயே நிகழ்த்தப்பட்டன. அவை பன்முகத் தன்மை பெற வேண்டும். இலங்கையின் இரு மொழிகளும் அவர்களின் இத்தகைய நிகழ்ச்சிகளில் இடம்பெறச்செய்ய வேண்டும்.

இத்தகைய காட்சிப்படுத்தல்கள் மலையகம், அம்பாறை, கிழக்கு வடக்கு பகுதிகளில் நிகழ்த்தப்பட்டால் மக்கள் மத்தியில் அது பாரியளவில் புரிதல்களை ஏற்படுத்தும்.

அவர்கள் நவீனத்துவத்தை வெறுப்பவர்கள் என்று இலங்கையின் முதலாளித்துவ பத்திரிகைகள் தொடர்ந்து சித்தரிக்கின்றன. ஆனால் அவர்கள் தகவல் தொழில்நுட்பத்தை மிகுந்த வினைத்திறனுடன் கையாளுகிறார்கள்.

அவர்களை சுடர்மிகும் அறிவு ஏதோவொரு அளவில் வழிநடத்துகிறது. ஆனால் "பொங்குதமிழர்கள்" இதனை நினைத்துக்கூட பார்க்கமுடியாது.

மக்களுக்காக தம்மை அர்ப்பணித்து வேலை செய்வதற்கு ஜே.வி.பியினர் தயாராக இருககிறாங்கள் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் தெற்கிலும் கிழக்கிலும் தமது வேலைகளின் ஊடாக அதனை நன்கு புலப்படுத்தியுள்ளார்கள். ஆனால் தமிழர்கள் மத்தியில் தமிழர்களின் பேரில் தமிழர்களை சுரண்டுவதும், தமிழர்கள மீது ஆதிக்கம் புரியும் சக்தியொன்று செல்வாக்கு செலுத்துகிறது.

ஜே.வி.பி சாமான்யரின் முகத்தை வெளியரங்குக்கு முன்னிலைப்படுத்துகிறது. ஆனால் வடக்கின் ஆதிக்க சக்தி சாமான்யர்களின் முகத்தை சிதைக்கிறது. பெருவாரியான மக்கள் திரளினரின் பாத்திரத்தை ஜே.வி.பி வலியுறுத்துகிறது. உணர்வுபூர்வமாகவே மக்கள் ஜே.வி.பி யின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகிறார்கள். வடக்கில் பயத்தின் நிமித்தம் பிரசன்னமாகாவிட்டால் உயிர் போவது உட்பட பெரும் அனர்த்தங்களை சந்திக்க வேண்டும் என்ற நிலையிலேயே மக்கள் வடக்கின் ஆதிக்க சக்திகளின் நிகழ்ச்சியில் பங்குபற்றுகிறார்கள்.

உயிரும் உடலும் உணர்வும் ஒன்று கலந்த நிலையில் ஜே.வி.பி யின் நிகழ்ச்சிகளில் மக்கள் பங்குபற்றுகிறார்கள். ஆனால் வடக்கின் ஆதிக்க சக்திகளின் நிகழ்ச்சிகளில் வெறும் பொம்மைகளாக ஆட்டு மந்தைகளாக மக்கள் பங்குபற்றுகிறார்கள்.

பிரபாகரன் சமூகத்தின் மீது சந்தேகப்படுவது அல்லது சமூகத்தை அச்சுறுத்தி வைத்திருப்பது போன்ற நடைமுறைகளின் ஊடாகவே தனது பலத்தை உறுதி செய்ய முற்படுகிறார். அவர் தான் மக்களுக்காக என்பதை விட மக்கள் எல்லோரும் தனக்காகவே என்ற பாசிச பாணியிலேயே சிந்திக்கிறார்.

ஜே.வி.பி மக்கள் மீது உள்ள நம்பிக்கை பெருவாரியான மக்களின் செயற்பாடு அவர்களின் அபிலாசை என்பவற்றையே முதன்மைப்படுத்துகிறது.

ஜே.வி.பி இன்னும் நீண்ட பாதையில் பயணம் செய்ய வேண்டும். சுய விமர்சனம், விமர்சனம் என்ற பாதையினூடாக கடந்த காலம் நிகழ்காலம் தொடர்பாக அவர்கள் ஆராய்ந்து தம்மை செழுமைபடுத்துவதன் மூலம் சமூகத்தில் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்த முடியும்.

# புலிகளின் மற்றொரு..........

08ம் பக்கத் தொடர்ச்சி

ப்பட்டும் புதைக்கப்பட்டிருக்கிறது. அங்குதான நூற்றுக்கணக்கான மாற்றியக்கத் தோழர்கள், போராளிகள் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு இருட்டறையிலும், பங்கருக்குள்ளும் வெளிச்சங்களையே காணமுடியாதபடி விலங்கிட்டு சிறைவைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால் அதில் எந்த ஒரு தோழருக்குமே அவர்களின் தலைவர்கள் அவர்களை வழிநடத்தியவர்கள் தற்போது அவர்களருகிலத்தான், அல்லது தங்கள் புதைகுழியினமேல் நின்றுதான் எங்களின் சகதோழர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு கொன்றுவிட்டு சந்தோசத்தை அனுபவிக்கிறார்கள் என்பதும், தங்களைக் கொன்றவர்களுடனும், கொடூரப்படுத்தியவனுடனும்தான் கைகோர்த்து நிற்கின்றார்கள், செயல்ப்படுகிறார்கள் என்பதும் தங்களின் சுடுசாம்பல் மேல் இவர்களின் பாதணிகள் பதிந்துள்ளதையும் அறியர்.

தொலைக்காட்சியில மினுக்கமாக முகத்தைக் காட்டி, வெட்கமில்லா வெட்டிப்பேச்சுப் பேசி பொய்யுரை பரப்பும் இவர்கள், தங்கள் தலைவரின் கட்டுப்பாட்டு எல்லையின் கரையோரத்தில் தங்கள் முகஙகளையே மறந்து, இருட்டறையில் முடங்கிக்கிடக்கும் தமது சகதோழர்களின் நிலைபற்றிய நியாயத்தை அந்தத் தொலைக்காட்சியில் ஒரு நிமிடம் சொல்லமுடியுமா?

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கொலையும் நிகழும்போது இவர்கள் மனதில் எப்படிப்பட்ட உணர்வுகள் இவர்களுக்கு உண்டாகின்றதென்பதை நாம் அறியோம், ஆனால், இவர்கள் அதைக் கணக்குப்பார்க்கின்றார்களா, பூரிப்படைகின்றார்களா அதுவும் கூட எமக்குத் தேவையில்லை. ஆனால், இந்தக் கொலைகளின்பால் வன்னியில் "கொலைக் கொண்டாட்டங்களில்" இவர்களும் பங்குகொள்கின்றார்களாம் என்பதுதான் மிகவும் இனிப்பான செய்தி.

இவர்கள் எதைச் செய்தாலும் புலிகளால் தவிர வேறு எவராலும் இவர்களுக்கு சாவு வராது என்பதும் இவர்கள் நன்கு தெரிந்துகொண்ட விடயம்.

### எமது தேசத்தின் மக்கள்

இந்தியச் சினிமாக்களில் வரும் வில்லன் பாத்திரங்களை எம்மக்கள் வெறுப்போடு நோக்குகிறார்கள், காரணம் இவர்களுடன் கூடப்பிறந்த மனிதாபிமானம், மனிதநேயம், மனிதப்பண்பாடு மற்றும் அவர்களால் ஜீரணித்துக் கொள்ள முடியாத, தங்கள் மனங்களுடன் ஒன்றிப்போகாத, தங்கள் எதிர்பார்ப்புகளுக்கு இசைந்து கொடுக்காத "குறிப்பாக" கொடூரமான பாத்திரமாக அவை சித்தரிக்கப்படுவதனால் ஆகும்

ஆனால், அதே சினிமாவில் காட்சியளிக்கும் கதாநாயகன் எந்த நேரத்திலும் இவர்கள் எதிர்பார்ப்புகளில் இருந்து சற்றும் விலகிப்போகக் கூடாது, இவர்களை ஏமாற்றிவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பார்கள். திரைப்படம் என்று தெரிந்தும் இவர்கள் மனதில் தங்களை மறந்த உணர்ச்சிவசம், சோகம், இறுதிக் கட்டத்தில் கண்களில் நீர் என பல வகையான உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் இவர்களிடம் காணலாம்.

ஆனால் நிஜவாழ்க்கையில் இவர்கள் (எமது தேசத்து மக்கள்) நிலை மாறுகின்றது. "நிஜத்தில் கொலை செய்பவனையும், கத்தியால் குத்துபவனையும், வாளால் தலையை துண்டாடுபவனையும், நித்தமும் சுட்டுக் கொலை செய்பவனையும்" மரத்துப் போன இவர்கள் கண்கள் அவற்றைக் காணும்போது கூச்சமடையவில்லை, அதை ஏற்க மறுக்கவில்லை. நிஜத்தை கண்ணை மூடிக்கொண்டு வெறும் குருட்டுக் கண்களால் பாங்க முயலும இவர்கள், நிலையற்ற போலியான படைப்புகளை நிலைநாட்ட நினைக்கிறார்கள். யாரை நேசிக்கிறாங்கள், யாரை வெறுக்கின்றார்கள் என்றால் அது உண்மைக்கு மாறான ஒரு நிலைப்பாடுதான்.

நமது தேசத்தைப் பொறுத்தவரையில் ஒருவனுககு அறிவு தேவையில்லை, கல்வி, ஒழுக்கம், ஆற்றல்,சிந்தனைகள் எதுவுமே தேவையில்லை கையில் ஓ் கூரான ஆயுதம் இருந்தால போதும் முன் கூறப்பட்ட சகலமுமே அதில்த்தான் அடங்கியிருக்கிறது. ஒரு தவறானவன் கையில் ஆயுதம் இருந்தால், அவன் இந்த சமூகத்தால் வரவேற்கப்டுகிறான், மதிக்கப்படுகிறான் அவன் பின்னால் ஒரு கூட்டம் காட்டுமிராண்டித்தனமான அவனின் வெட்டுக் கொத்து கொலைகளுக்கெல்லாம் ஆமாம் போடும் சமுதாயம் படித்தவர்கள் படிக்காதவர்கள் யாவருமே இதில விதிவிலக்கல்ல.

ஊரைத்திருத்தவேண்டிய ஊடகங்களும் உயிர்ப்பலியெடுப்புக்கு ஒத்தூதும் கலாச்சாரம் நம்நாட்டில் வாழும் போது ஒருவருமே மிஞ்சமாட்டார்

### கணனிப் பதிவுகள்

எத்தனைபேர்வரை இதுவரை மண்டையில் போடப்பட்டார்கள்? யார் யார்?

இன்னும் எத்தனைபேர்வரை மிகுதியாக உள்ளனர்? .................. ?

எத்தனைபேர் வாழ்க்கையில் வாழாவெட்டியாக்கப்பட்டனர்? .............?

இன்னும் எத்தனை பேரை வாழா வெட்டியாக்கவேண்டும்?...............?

எத்தனைபேர் வெட்டிக் கொல்லப் பட்டனர்? யார் யார்?..............?

இன்னும் எத்தனைபேரை வெட்ட வேண்டியிருக்கிறது? .............?

எத்தனைபேர் உயிருடன் எரிக்கப் பட்டார்கள்?............?

இன்னும் எத்தனைபேரை கொளுத்த வேண்டியிருக்கிறது?...........?

இதுபோன்ற கொலைக் கணக்குகள் எல்லாம் கம்பியூட்டரில் பதிவு செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக்கப் பட்டிருக்கும் ஒரு நாகரிகமான பிரதேசம் வன்னிப் பிரதேசம். கம்பியூட்டரில் கொலைக்கணக்குப் பார்க்கும் முதலாவது பெருமைக்குரிய நாடும் நம்நாடுதான். உலகம் கம்பியூட்டர் மயமாக்கப் பட்டுவிட்டது என்பது இதைத் தானா?.

ஆனால் இங்கே, கொலைகள் கம்பியூட்டர்மயமாக்கப்பட்டுவிட்டது என்றுதானே அறிகிறோம். கொலைகளைக் கணக்குப்பார்க்கும் கருவியாகத்தான் நம்மவர்கள் கணனியைப் பயன்படுத்துவார்கள் என்றால் அதைப் படைத்தவர் பாவியா? அல்லது பயன் படுத்துபவர் பாவியா?

இந்தக் கணனி சிலவேளை சில ஆண்டுகளுககு முன்னர் அதாவது 86ம் ஆண்டு அளவில் வந்திருந்தால் புலிகளுக்கு எவ்வளவு வசதியாக இருந்திருக்கும். எத்தனையாயிரம் கொலைகளெல்லாம் கணக்கில்லாமலே போய்விட்டது. ஹிட்லரா நாங்களா என்று சவால் விடும் இவர்கள், சாவுக் கணக்குகள் குறைவதை அனுமதிப்பார்களா? இனியும் என்னென்ன நவீன கருவிகள் அவர்களுக்கு "கொலை செய்வதற்கும் கொலையைப் பதிவு செய்வதற்கும்" தேவையோ! அதைக் கூட தங்களை நாகரீக நாட்டவர்கள் என்று இனம் காட்டிக்கொள்ளும் அனுசரணையாளர்கள் கவனிப்பார்கள்.

# தாய் தந்தையர்............

01ம் பக்கத் தொடர்ச்சி

மாற்று கருத்துள்ளவர்களை புலிகளின் அத்தனை வார்த்தைகளையும் ஏன் ஒருபடிமேலே சென்றும் தூசித்தார். யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டபின் புலிகளால் மேற்கொள்ளப் பட்ட அத்தனை கொலைகளையும் தமிழ் நெற் இணையத்தளம் நியாயப் படுத்தியே எழுதியது துணைப்படைகள் என்று எழுதுவதும், எழுதும் முறையில் இவர்கள் கொல்லபட்டவேண்டியவர்கள் என்று அழுத்தியுரைத்தது. தமிழ் நெற் மாத்திரமல்ல பெரும்பாலான தமிழ் ஊடகங்களின் நிலை அது தான்.

துரதிஷ்டவசமாக தமிழ் சமூகத்தினுள் துப்பாக்கிகளே ஆதிக்கம் புரிகின்றன. கருத்துக்கள் அல்ல. புலிகள் அதன் மொத்த வியாபாரிகளாக இருக்கிறார்கள். இந்த மொத்த கொலை வர்த்தகமே இன்று தமிழ் சமூகத்தில் சிறுசிறு கிளைகளை ஏற்படுத்தியுள்ளது.

பாசிசம் என்பது மனித குலவிரோத நடைமுறை. இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தில் அறிமுகமான இந்த இனவெறி, கொலைவெறி மனித குல விரோத பயங்கரவாதம் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு ஆட்களால் பாசிச நிறுவனங்களால் மீள்நிறுவப் பட்டன. கம்பூச்சியாவில் பொல்பொட், சிலியல் பினோச்சே, இலங்கையில் ஜே.ஆர், பிரபாகரன் போன்றவர்களால் இந்த பாசிச நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

புலிகள் பலம் வாய்ந்த இராணுவக் கட்டமைப்பு அரசியல் கட்டமைப்பை கொண்ட பாசிச அமைப்பாகவே இருக்கிறார்கள். அந்த பாசிச கட்டமைப்பின் அதிகாரபூர்வமான செய்தி ஊடகமாகவே தமிழ்நெற் தொழிற்பட்டது. சிவராமின் பரவலான வாசிப்பு புலமைத்துவம் பதிவுசெய்யப்பட வேண்டியதே. ஆனால் அவர் துரதிஷ்டவசமாக பாசிசத்தின் எழுத்தாளராகவே திகழ்ந்தார். அவரது அறிவு, ஆளுமை எல்லாமே அதற்கே பயன்பட்டது. அவரது அண்மைக்கால எழுத்துகள் சிலவற்றில் சில மீறல்கள் இருந்தபோதும் அவர் சாராம்சத்தில் பாசிசத்தின் தீவிர ஆதரவாளராக இருந்தார். புலிகளின் பாசிசக்கருத்தியல் ஏதோ ஒருவகையில் சமூக மயமாக்கபட்டு விட்டது. இறுதியில் பாசிச கருத்தியலின் சமூக நடைமுறையே அவரின் உயிரையும் காவு கொண்டு விட்டது.

இத்தகைய படுகொலைகள் நிறுத்தப்படுவதற்கும் காட்டு மிராண்டி நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு மாறுவதற்கும் நாம் நீண்ட நெடும் போராட்டம் நடத்தியாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா

1. பத்மநாபா என்பது:


- ஒரு சமூக சித்தாந்தத்தின் சின்னமாகும்,
- ஒரு ஜனநாயகபூர்வமான மனிதாபிமான தலைமைத்துவத்துக்கு உதாரணமாகும்.

1) தமிழர்கள் மத்தியில் ஜனநாயகத்தை மீள நிலைநாட்டல்,

2) இலங்கையின் அனைத்து இனங்களுக்கிடையில் சமத்துவமும், சமநீதியும், அதிகாரப்பகிர்வினுடாகவும், இனங்களுக்குரிய சமவாய்ப்புக்களினூடாகவும் ஏற்பாடு செய்தல்,

3) அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் உள்ளடக்கிய வகையிலும் பரந்துபட்ட மக்களின் ஜனநாயகத்தைக் கொண்டதுமாக இலங்கை மக்கள் அனைவருக்கும் ஒரு சமத்துவ சமுதாயத்தை, காலத்துக்கும், தேவைகளுக்கும் பொருத்தமான போராட்ட வழி முறைகளினூடாக நிறுவுதல் ஆகிய அரசியல் நிலைப்பாடுகளின் பிரதிநிதித்துவமாகும்.

- எவ்வகைப்பட்ட சிரமங்களின் மத்தியிலும் பல்வேறு வகைப்பட்டவர்களையும் ஒரு குறிக்கோளை நோக்கி இணைத்து அழைத்துச் செல்லக் கூடிய ஆளுமையின் அடையாளமாகும்,
- இனங்களின், தேசங்களின் எல்லைகளைக் கடந்த ஒரு சர்வதேச மனிதாபிமானிக்கான இலக்கணமாகும்.



இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் - இலங்கை ஜனாதிபதி சந்திரிகா. உபகண்ட நல்லுறவு இலங்கையின் சுபிட்சத்திற்கு வழிசமைக்கும்.



இலங்கையில் கடலோர நாகரீகம் தன் புதைகுழியிலிருந்தே உயிர்த்தெழ வேண்டும். படுகொலை நிறுத்தப்படுவதே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகளை முழுமையாக மேற்கொள்ள வழிவகுக்கும்.

# புலிகளின் இன்னுமொரு முகம் ரீ.என்.ஏ

மாற்று ஜனநாயகக் கட்சிகளில், தலைவர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் தங்களை இனங்காட்டி, அந்தக்கட்சிகளின் போராட்ட வரலாற்றை தலைகீழாக்கி அக் கட்சிகளின் தலைவர்களினதும், தோழர்களினதும் தலைவிதியை மாற்றியமைத்து, அவைகளிலிருந்து வடிகட்டி எடுக்கப்பட்டு வெளியில் வீசப்பட்டவர்கள்தான் இன்று ரி.என்.ஏ யில் அங்கம் வகிக்கும் நாயகர்கள் இவர்களில் பலர்.

இப்போது மிகவும் உசாராகவும் ஊக்கமாகவும் இருக்கிறார்கள் என்பதை எம்மால் கண்டுகொள்ள முடிகிறது. அதற்குக் காரணம் இவர்களின் வாழ்க்கைக்கு வாழ்நாள் முழுவதும் அச்சுறுத்தலாக இருந்து வந்தவர்கள், இவர்களின் சகாக்களையெல்லாம் கொன்றொழித்தவர்கள். இவர்களுடன் பேரம் பேசி அடிமைகளாக தங்களின் பணி செய்யவேண்டி அண்மைக்காலங்களில் இவர்களின் உயிர்களுக்கு தற்காலிக உத்தரவாதம் பேச்சளவில் வழங்கியுள்ளமைதான் (காலத்துக்குக் காலம் அது புதுப்பிக்கப்படவேண்டும், அதுவும் பரீட்சைகளில் பாஸ் பண்ணினால் மட்டும்தான் என்பது வேறு)

அவர்களின் ஊதுகுழல் ஊடகங்களும், இவர்கள் உயிருக்கும், ஊசலாடும் பதவிகளுக்கும், உத்தரவாதம் வாங்கித்தருவோம். நீங்கள் இந்த வரலாற்று உண்மைகளையும், கொலை செய்யப்பட்ட உங்கள் தலைவர்களின தியாகங்களையும், அவர்களின் நேர்மையான போராட்ட வரலாறுகளையும் மற்றும் அவர்களின் படுகொலைகள் சம்பந்தமான விடயங்களை எல்லாம் மறைத்து, மழுங்கடிக்கச் செய்து மாற்றியமைத்து, தலைகீழாக்கி, பொய்யுரை கூறி. எமது நாயகர்களின் போராட்டத்தின் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும், ஆட்கடத்தல்களுக்கும் பிள்ளைபிடிகளுக்கும், வெட்டுக்கொத்துகள், கப்பம் கறத்தல், படுகொலைகளுக்கும் எங்களுடன் சேர்ந்து வாழ்த்துப்பாடி, இதுபற்றி யாரும் வாய் திறக்காமல் விடும் அளவுக்கு உண்மையைப் பொய்யாக்கி பொய்யையும் உண்மையாக்கி, படித்தவர்களை முட்டாளாக்கி, படிக்கின்றவர்களுக்கும் மூளைச் சலவை செய்து, ஒருபுரட்சியை செய்வதற்கு நீங்கள் எம்முடன் சேர்ந்து ஒத்துழைத்தால் "நீங்களும் உங்கள் பதவிகளும் பாதுகாக்கப்படும்? என்பதற்கு நாங்கள் எமது தேசியத் தலைவரிடமிருந்து உத்தரவாதம் வாங்கித்தருவோம்.

அத்தோடு அவர்களின் ஊதுகுழலான நாங்கள், உங்களுக்கும் ஊதி உங்களையும் பெரிதாக்குவோம்.

(இந்த உத்தரவாதத்தின் விளைவுதான் இந்த நாட்டின் இன்றைய நடைமுறையில் நாம் நாளாந்தம் அனுபவிக்கும் பயங்கரமான விளைவுகள்.)

ஆனாலும் இவ்வளவு சுலபமாக இவர்கள் எப்படி இந்த மக்களை நம்ப வைக்கிறார்கள்? எப்படி இவர்களை அவர்கள் நம்புகின்றார்கள்? என்பதெல்லாம் அவர்களுக்குத்தான் வெளிச்சம். இந்த நாட்டின் போராட்ட வரலாற்றில் எத்தனையோ நேர்மையான அரசியல்வாதிகளும் உண்மையாகவும், நேர்மையாகவும் மக்களுக்காகப் போராடிய தலைவர்களும் இன்று தலைமறைவாகவும், தலையில்லாமலும் போயுள்ளார்கள், ஆனால், இந்த வரலாற்றை மறைதது, தங்களுக்கென்று ஒதுக்கவேண்டியதையெல்லாம் ஒதுக்கிகொண்டு, தங்களை நம்பி வந்தவர்களையும், தங்கள் தலைவர்களையும் காட்டிக் கொடுத்து பலிக்கடாக்களாக்கிவிட்டு, தங்கள் உயிரை இந்த நாட்டில் யாரிடம் அடகுவைத்தால் அதைத் திரும்பவும் மீட்கமுடியுமென்று நினைக்கிறார்களோ, தங்கள் உயிருக்கு இங்கு யாரால் ஆபத்து வரும் என்று அஞ்சுகிறாகளோ, அவர்களிடமே மிகவும் பாதுகாப்பான முறையில் அடகு வைத்துவிட்டு, அவர்களின் கூலியாட்களாக மிகவும் கேவலமான முறையில் ஏவல்தொழில் செய்யும் இவர்கள் நிச்சயமாக மக்களுக்காக எந்தக்காலத்திலாவது நியாயத்தைக் கூற முன்வருவார்களா? மக்களின் உண்மையான விசுவாசிகளாக தங்களை இனங்காட்டிக்கொள்வார்களா? என்ற கேள்வியை நாகரீகமான சமுதாயம் கேட்டுக் கொண்டேதான் நிற்கின்றது.

இவர்கள் எப்படித்தான் தொலைக் காட்சிகளில் தங்களை அப்பாவிகள் போலவும், நேர்மையான அரசியல் வாதிகள் போலவும், உண்மையான மக்களின் தொண்டர்கள் போலவும் தங்கள் முகங்களைக் காட்டி குழந்தைகளைப்போல முகத்தை வைத்திருக்கின்றார்கள் என்பது இவர்களைத் தவிர வேறு யாராலும் புரிந்துகொள்ள முடியாத இரகசியம்தான்.

ஆனால் இவர்கள் எவ்வளவு காலம் மக்களை இப்படி ஏமாற்றப்போகிறார்கள்? என்பதை வழமையான கேள்வியாக நானும் கேட்க விரும்பவில்லை. ஏனெனில் இதே கேள்வியைத்தான் தொடாந்தும் எலலா ஜனநாயகவாதிகளும், நேர்மையான பத்திரிகையாளர்களும், நமது தேசத்தின் நலன் விரும்பிகளும், மற்றும் இவர்களது உண்மையான வேஷத்தை நன்கு புரிந்துகொண்ட அனைவருமே கேட்டுக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருக்கின்றார்கள்.

ஆனால் இவர்களை இந்தச் சமூகம் தூக்கியெறிந்து விடுகின்றதா? தொடர்ந்தும் இவர்களால் ஏமாற்றப் பட்டுக்கொண்டேதான் இருக்கின்றது. இதுவரை இந்த மக்கள் அதைப் புரிந்துகொண்டார்களா? விளங்கிக்கொண்டார்களா?. எனவேதான் இவர்கள் இன்னும் எத்தனையோ காலத்துக்கு ஏமாற்றத்தான் போகின்றார்கள் என்பதுதான் உண்மை. ஏமாறுபவன் இருக்கும் வரை ஏமாற்றுபவன் உயிர் வாழ்வான். இதுதான் இன்றைக்கு இந்த நாட்டிலுள்ள யதார்த்த நிலை.

எனவே இவர்கள்தான் இந்தநாட்டையும் மக்களையும் நன்கு புரிந்து கொண்டவாகள். நன்றாகப்புரிந்து கொண்டதன் வெளிப்பாடுதான இன்று அவர்களின் சுயநலத்துக்காகச் சொத்துச் சேர்க்கும் கும்பலாக தொடர்ந்தும் தங்களது ஏமாறறு வித்தையைக்காட்டி மக்களைப் பயன்படுத்தி தாங்கள் ஏக போக வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.

புலிகளின் பாசறை முகாமில் இருந்தபோது எமக்கிருந்த் கவலைகள்

எமது இந்தப் புனிதமான விடுதலைப் போராட்டம் சிதைவடைந்து விட்டதே என்பது ஒரு புறம், மறுபுறத்தில எங்கள் தலைவர்கள் உயிர்களுக்கு என்ன நேர்ந்ததோ! என்பது கூட பல தோழர்களின் உருக்கமான கேள்வியுடன் கூடிய சிந்தனைகளாக இருந்தது. ஒவ்வொரு தோழரும் பிடிபட்டுவிட்டார்களாம்! சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்களாம் என்ற சேதியை நாம் உடனுக்குடன் அறிந்தவண்ணமே இருந்தோம்.

நான் நினைக்கிறேன், இதில் எந்த ஒரு தோழராக இருந்தாலென்ன, தலைமைப் பொறுப்பு வகித்தவர்களாக இருந்தாலென்ன, எல்லோரும் காப்பாற்றப்படவேண்டும் என்பதுதான் ஒவ்வொரு தோழர்களினதும் உயிர்த்துடிப்பாகவும் இருந்தது. ஆனால், இப்படிப் பட்ட தோழர்கள் அதுவும் தங்கள் உயிரையும் பணயம் வைத்து தலைவர்களைக் காப்பாற்றவேண்டும் என்று எண்ணிய, அவர்களின் நலன்கள் பற்றி அக்கறைகொண்ட எத்தனையோ தோழர்களின் வாழ்க்கையை, அவர்களின் விலை மதிக்க முடியாத உயிர்களை புலிகளிடம் காட்டிக்கொடுத்ததன் மூலம் சிதைவடைந்துபோகச் செய்தும், அழிந்துபோகச் செய்யும், அழித்துவிட எண்ணும் சில தலைவர்கள் எம்மத்தியில் இருந்துகொண்டுள்ளார்கள் என்பதுதான் சில இயக்கங்களில் உள்ள போராளிகளின், தோழர்களின் மறக்க முடியாத வேதனை.

இதனைச் செய்தவர்கள் தாங்களும் தங்கள் குடும்பங்களும் சுகமாகவும், சொகுசாகவும் வாழ்வதற்காக தங்களைப் புலிகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக அவர்களுடன் சேர்ந்து தமது தோழர்களை, சகாக்களை, தங்களைக் காப்பாற்றியவர்களை அழிப்பதற்கான வழிவகைகளை ஒப்பந்த முறைப்படி தொடர்ந்தும் செய்து கொண்டேயிருக்கலாம்,

ஆயினும், இவர்களைப் புகழ்பாடும கூட்டமும் இவர்களின் உண்மை நிலை, மனநிலையும் அறிந்துகொள்ளாத சமுதாயமும் தொடர்ந்தும் பலியெடுப்புக்கள் தொடர்வதை நிறுத்தச்சொல்லியும், இவர்கள் புலிகளோடு செய்து கொண்ட பலியெடுப்பு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும்படியும் இவர்களைக் கேட்பார்களா?

இன்று இந்த ரி.என்.ஏ காரர்களில் சிலரின் இருப்பிடமாகவும், சிலரின் வசிப்பிடமாகவும், கேளிக்கைக் கூடமாகவும் இருக்கும் வன்னியில்த்தான் இவர்களது சகதோழர்களின் உடல்ஙள அடித்துக் கொன்றும், சுட்டுக்கொல்ல

தொடர்ச்சி 07ம் பக்கம்

தி. சிறிதரன் 141ஏ, மன்னார் வீதி, குருமன்காடு, வவுனியா. அவர்களால் இரத்தினபிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org